# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை



12-10-69 அன்று காஞ்சிபுரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையி
பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு சாதிக்பாட்சா அவர்களால் திறந்து வைக்கப்பட்
செங்கை மாவட்ட (மேற்கு) காவல்துறை கண்காணிப்பாளரின் தலைமை அலுவலகக் கட்டிட

விலை 20 காசு

# பெரியார் மருந்து

—மலையமான்—

ஆனந்தவிகடன் 'வேதனைக்குரிய பேச்சு' என்ற தலைப்பில் சென்ற 2–10–69 அன்று ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறது. அதில் இந்துப்பத்திரிகையில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதொரு விவகாரத்திற்கு வேகம் கொடுத்துக் கடுமையாக எழுதியிருக்கிறது.

திருச்சி தில்லைநகரில் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் பேசிய பேச்சைத்தான் விகடன் வேதனைக்குரிய பேச்சு என்று எழுதியிருக்கிறது.

திரு. சுந்தரவடிவேலு அவர்களுடைய பேச்சை இந்துப்பத்திரிகை வெளியிட்டு அது சம்பந்தப்பட்ட வாதங்களையும் தன்னுடைய ஆசிரியருக்குக் கடிதப் பகுதியில் தொடர்ந்து வெளிப்படுத்தி, திரு. சுந்தரவடிவேலு அவர்களே எழுதிய ஒரு கடிதத்துடன் அந்த விவகாரத்துக்கு முற்றுபுள்ளி வைத்துவிட்டது "தங்கள் பத்திரிகையில் வந்த விதமாக நான் பேசவில்லை. இது தொடர்பாகத் தவருன கருத்து வேறுபாடு கொண்டிருப்பதைக் காண நான் வருந்துகிறேன். நீங்கள் செய்தி வெளியிட்டதைப் போல நான் பேசவில்லை" என்றும் "இந்த விவகாரத்தை இத்துடன் நிறுத்திவிடுங்கள்" என்றும் திரு, சுந்தரவடிவேலு அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் இந்துப் பத்திரிகை, அதெல்லாமில்லை; எங்கள் திருபர்தான் அரிச்சந்திரன் என்ற குறிப்போடு சேர்த்துத் திரு. சுந்தரவடிவேலு அவர்களின் கடிதத்தை வெளியிட்டதோடு நிறுத்திக் கொண்டுவிட்டது.

அது நிறுத்திக் கொண்ட இடத்திலிருந்து ஆனந்த விகடன் பிடித்துக் கொண்டு தன் தலையங்கத்தைத் தீட்டியிருக்கிறது.

தமிழகத்திலே குறிப்பாக சில பத்திரிகைகள் உள்ளே ஒன்றும் வெளியே ஒன்றுமாகத் தங்கள் நோக்கத்தையும்—கொள்கை கோட்பாடுகளையும் வகுத்துக் கொண்டிருப்பது நமக்கெல்லாம் தெரியும். அவை அவ்வப்போது 'சில்மிஷங்கள்' பண்ணி வந்திருப்பதையும் நாம் அறிந்திருக்கிறோம், எனவே ஆனந்த விகடனின் தலையங்கம் நமக்கொன்றும் புதிதல்ல. புரியாததுமல்ல!

தன்னுடையவும் தன்னைப் போன்றனவகளான இந்து, மித்திரன் ஆகியவற்றினுடையவும் ஆன அம்மாமித்தனக்கோட்பாடுகளுக்கு ஊறுவிளைத்துவிட்டதாக அது கூச்சல் போடுகிறது.

திரு. சுந்தரவடிவேலு 'தமிழர்' என்ற சொல்லை ஆனந்தவிகடன் தான் வகுத்துக்கொண்டிருக்கும் பொருளில் பயன்படுத்தாமல் சரித்திரத்துக்கு எட்டாத காலத்துப் பொருளில் பயன்படுத்திப் பேசிவிட்டாராம். தமிழர் என்று சொன்னல் சரித்திரத்திலே ஒரு பொருளாம்; நடைமுறையிலே ஒரு பொருளாம். அரசியல்வாதிகள் தமிழர் என்று சொன்னல் அதற்கொரு பொருளாம். விகடன் தன் புலமையைக் கக்குகிறது. தமிழர்களைத் தனியாகப் பிரித்துப் பேசிவிட்டாராம் திரு. சுந்தரவடிவேலு; அது 'அனைவருக்கும்' அதிர்ச்சியைத் தருகிறதாம். அந்த 'அனைவருக்கும்' என்பதிலே யார் யார் இருக்கிருர்கள் என்று நாம் விகடனின் அகராதியைப் புரட்டித்தான் தெரிந்துகொள்ள வேண்டும் என்கிற நிலையில் இல்லை. யார் அந்த அனைவரும் என்பதை நாம் இந்துப் பத்திரிகையில் ஆசிரியருக்குக் கடிதம் பகுதியில் ஆர்ப்பரித்தோரின் பெயர்களைப் பார்த்த மாத்திரத்திலேயே புரிந்துதான் வைத்திருக்கிரோம்,

"தீண்டாமையை அனுஷ்டிக்கச் சொல்லி என்னுடைய தர்மம் எனக்குச் சொல்கிறது. யார் எதிர்த்து நின்ருலும் நான் தீண்டாமையைக் கடைப்பிடித்தே தீருவேன்"— என்று பூரிசாமியார் பேசினுர், அவர் பேசிய இந்த சட்டவிரோதப் பேச்சினுல் உண்டாகாத உயிர் 'மறைந்து வரும் சாதிப் பேய்க்குத் திரு, சுந்தரவடிவேலு பேசியதனுல் உண்டாகிவிடும் என்கிறது விகடன் பூரியாரைக் கேட்டபோது "ஆமாம் பேசினேன், அப்படித்தான் இனியும் பேசுவேன்" என்று ஆர்ப்பரித்தார். ஆனுல் திரு. சுந்தரவடிவேலு அவர்களோ தான் அவ்விதம் பேசவில்லை என்கிருர். பேசாத ஒரு பேச்சுக்கு இப்படி அமர்க்களப்படுத்துவதிலிருந்து விகடனும் இந்துவும் தங்கள் 'உள் மனத்தில்' என்ன எண்ணம் வைத்திருக்கின்றன என்பதை நமக்குத் தெளிவாக உணர்த்திவிட்டன.

இதனை நன்ருக உணர்ந்து கொண்ட நம் தமிழக முதலமைச்சர் திரு. கருணுநிதி அவர்கள் "இந்த இதழ்களுக்குச் சரியான மருந்து பெரியாருடைய மருந்துதான். 'அதைப் பயன்படுத்தவேண்டி வருமோ என்றுதான் நாங்கள் கவலைப்படுகிறோம்' என்று சொன்னுர்.

இதைச் சொன்ன மறுநாளேதான் 'திருந்திவிட்டதாக'க் காட்டிக் கொண்டது இந்து. ஆனுல் இப்போது "ஊருக்கு இளைத்தவன பிள்ளையார் கோயில் ஆண்டி" என்பார்களே அந்தக் கதையாகத் திரு. சுந்தரவடிவேலு அவர்களைப் பற்றிய தவருன பிரசாரத்தில் இறங்கியிருக்கின்றன.

நாம் முன்பே இந்த இதழின்மூலம் 'நேற்றைய செய்தி இன்றைய வரலாறு' என்ற தலைப்பில் திரு. சுந்தரவடிவேலு அவர்களின் பேச்சைப் பற்றிய விளக்கமளித்திருந்தோம். ஆகையால் மீண்டும் அதனையே சொல்ல விரும்பவில்லை.

ஆனுல் ஒன்றுமட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறோம்,

'தமிழர்' என்ற சொல்லுக்குப் பொருள் சொல்லும் 'உரிமை' விகடனுக்கு இருப்பது போலத் திரு. சுந்தரவடிவேலு பேசியதாகச் சொல்லும் பேச்சுக்குப் பொருள் சொல்லும் உரிமையும், கடமையும் எங்களுக்கு இருக்கிறதல்லவா? அந்த வகையில் திரு. சுந்தரவடிவேலு அவர்களின் பேச்சைப் பற்றிய விளக்கத்தை மீண்டும் படைக்கிறோம்.

"உயர் நீதிமன்ற நீதிபதிகளில் பதினுன்கு பேர் தமிழர்கள் என்ருல் அது பெரியாரது இடைவிடாத

(4–ம் பக்கம் பார்க்க)

காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 6 | 26—10—69 | இதழ் 15

# கேலிக்குரிய கட்சி!

நாடெங்கிலும், காங்கிரசுக் கட்சிக்கு இப்படியொரு இரங்கத் தக்க நிலைமையேற்பட்டிருப்பது வருந்தத் தக்கதாயிருக்கிறது. சுதந்திரப் போருக்கு தலைமை யேற்றிருந்து வெற்றியுங் கண்ட அந்தச் கட்சிக்கா இந்த நிலைமை என்றெண்ணி வேதனைப்படவேண்டியிருக் கிறது.

அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சியின் தலைவர் மீது நம்பிக்கையில்லை என்றும், அவர் பதவி விலக வேண்டும் என்றும் கோரி அ. இ. கா. க. உறுப்பினர் களிடம் கையெழுத்துச் சேகரிக்கும் பணியில் துணைக் கண்டத்து பிரதமர் நேர்முகமாக ஈடுபட்டிருப்பதாக. ஒரு செய்தி வெளியாகி இருக்கிறது.

இதே வேளையில் தென் பகுதியைச் சேர்ந்த 4 மாநிலங்களது பிரதமர் எதிர்ப்புக் காங்கிரசுத் தலைவர் கள் ஒன்றுகூடி, பிரதமரின் போக்கு பற்றி காரசாரமான விவாதம் நடத்தி கண்டனமும் தெரிவித்திருக்கிறார்கள்.

இருதரப்பினரும் எந்த அடிப்படையில் இது போன்ற இழிவான செயல்களில் ஈடுபடத் தொடங்கி இருக்கிறார்கள் என்பதோ, இதில் ஈடுபாடு கொண்டிருப் பவர்கள் அவர்களுக்கும் அப்பால் நாடு என்று ஒன்று இருக்கிறது; அதிலே குடிமக்கள் என்பவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்—அவர்களைக் காக்கும் பொறுப்பு அரசுக்கு இருக்கிறது என்பதோ நினைத்து பார்க்கப்படு கிறதா?

பிரதமர் இந்திரா அம்மையாரை, பதவியிலிருந்து தூக்கியெறிந்துவிட கடும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டனவென்றும், அதன் எதிரொலியாகவே பிரதமர், கட்சிமட்டத்தில் கட்சிக்கெதிராக பல நடவடிக்கை களை மேற்கொள்ள நேர்ந்தது என்றும் கூறப்படுகிறது. இந்த நிலைமை தோன்றுவதற்கு முழுமுதற்காரணம் பெங்களூர் காங்கிரஸ் கூட்டம்தான் என்றும், அதிலும் குடியரசுத் தலைவருக்கான வேட்பாளர் தேர்வுதான் என்றும் நம்பப்பட்டாலும், வேறுசில பின்னணிகளும் இணைந்திருப்தாகப் பேசிக்கொள்ளப்படுகிறது.

இதுதான் காரணம்என்று வெளிப்படையாகக் கூற முடியாவிட்டாலும், காங்கிரசுத் தலைமைக்கும் அதன் ஆட்சித் தலைமைக்கும் ஏற்பட்ட ஆதிக்கப் போட்டியே இதுபோன்ற சிறுபிள்ளைத்தனமான செயல்களைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றன.

குற்றம் இழைத்தவர் யார்! ஆட்சித் தலைமையா? கட்சித் தலைமையா? இவர்தான் குற்றவாளி என்று சுட்டிக்காட்ட முடியாத அளவுக்கு ஒவ்வொருவரும் குற்றவாளிகளாகவே நமக்குத் தோற்றமளிக்கிறார்கள்.

பிரதமரைச் சார்ந்தவர்கள் என்போர், பிரதமர் சார்பில் பல கேடுபாடுகளை உண்டாக்கிக் கொண்டிருக் கிறார்கள். பிரதமரும், தமது சூழ்நிலைக்கோளாறு காரண மாக அந்தக் கேடுகளுக்கு ஆதரவு காட்டித்தீரவேண் டியவராகிவிடுகிறார். இதுபோலவே, கட்சித்தலைவரைச் சார்ந்தவர்களும் சில தவறுகளைச் செய்து விடுகிற போது, தலைவர், அவர்களையும் அணைத்துக்கொண்டே செல்லவேண்டிய நிர்ப்பந்தத்துக்காளாகிவிடுகிறார்.

இதுபோன்ற நிலைமைகளால் நாளும், நாளும் குற்றங்களும், குற்றச்சாட்டுகளும் மலிந்துகொண்டே போகின்றனவே ஒழிய, நிலைமை சீர்படும் என்பதற்கான ஆதாரம் மேலும் கிடைக்கவில்லை.

பிரதமர், தனக்குப் பதவி முக்கியமல்ல என்று கூறு வதைப்போலவே, நிஜலிங்கப்பாவும் தனக்குப் பதவி முக்கியமல்ல என்கிறார். இருவரும் கட்சியும் அதன் நலனும்தான் முக்கியம் என்கிறார்கள். ஆனால் அவர் கள் செயல்படும் விதமோ, 1972 வரையிலாவதுகாங் கிரஸ் இருக்குமா என்ற ஐயத்தைத் தோற்றுவிக்கிறது.

காமராசரைப் பொறுத்தமட்டில், அவர் இதுவரை யில் யாரையும் வாழவிட்டவரல்ல. அப்படிப்பட்டவர் இந்திராவிடம் கண்ட பல தோல்விகள் காரணமாக 'உன்னை வாழவிடப்போவதில்லை' என்று வெளிப்படை யாகவே "சூள்" எடுத்துக்கொண்டுச் செயல்படத் தொடங்கி இருக்கிறார். இதன் எதிரொலியாகவே தென்மாநிலக் காங்கிரசுத் தலைவர்களது கூட்டம் அண்மையில் கர்நாடகத்தில் நடைபெற்றிருப்பதாகும்.

இந்திராவைப் பொறுத்த மட்டில் 1972 வரையில் எப்படியும் காலந்தள்ளிவிட முடியும். காங்கிரசே காலை வாரிவிட்டுவிட்டாலும், எதிர்க்கட்சிகளின் துணை யோடும், தன் ஆதரவு காங்கிரசுக்காரர்களின் துணை யோடும் கூட 72 வரை சமாளித்துவிட முடியும், அதற்குப்பிறகு இப்போதைய நிலைமை காரணமாக காங்கிரஸ் அரசு அமையும் நிலை இருக்குமா என்பதை எத்தரப்பினரும் எண்ணிப்பார்த்ததாகத் தெரியவில்லை.

இன்றைக்கு, பிரதமரை ஆதரித்துக்கொண்டிருக் கும் எதிர்க்கட்சிகள், தேர்தல் என்று வரும்போது தனித் தனிக்கட்சிகளாகத்தான் செயல்படுமே ஒழிய, பிரதமர் என்பதற்காகவோ, அல்லது வேறு எவருக் காகவோ காங்கிரசை ஆதரித்துவிடப்போவதில்லை.

இதுபற்றி எண்ணிப்பார்க்க முடிந்தவர்களானால், இந்தப் பிரச்னைகளைப் பெரிதுபடுத்தமாட்டார்கள்.

வருகிற 1ம் நாள் நடைபெறப்போவதாக அறிவித் திருக்கிற அ. இ. கா. க. கூட்டம், இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்காவிட்டால், காங்கிரஸ் என்பது கேலிக் குரிய ஒன்றாகிவிடும் என்பதை இப்போதே சொல்லி வைக்கலாம்,

# தமிழன்னையின்  கண்ணீர்!

புலவர் கோ. வெங்கடாசலம்

இடிவிழுந்து போனதையோ, தமிழர் நெஞ்சில்!
ஏற்றமிகு பண்பாளர் மறைந்தார் அண்ணா!
அடியிழந்த மரம்போல், மக்க ளெல்லாம்,
அண்ணாவின் இறுதியெண்ணிக் கதறி வீழ்ந்தார்!
கொடியிழந்து போனதையோ, கொள்கைக் கோயில்!
கொட்டுகின்றாள், தமிழன்னை கண் ணீர் வெள்ளம்!
கடிதெழுந்து துடிக்கிறதே இளமை நெஞ்சம்!
கரும்பாகப் பேசுகின்ற அண்ணா எங்கே?

அறிவுலக எழில்விளக்காம் அறிஞர் அண்ணா,
அன்பாலே, அனைவரையும் கவர்ந்த சான்றோர்!
செறிவான உரைநடையில் நாட கங்கள்,
செந்தமிழால், செய்தளித்தார்! சீர்த்தி பெற்றார்!
குறிப்பாகச் சொற்பொழிவால் தமிழ கத்தில்,
கொள்கைக்கு விளக்கங்கள் பலவும் தந்தார்!
அறிவார்ந்த கட்டுரைகள், கதைகள் தீட்டி,
ஆர்வத்தை வளர்த்துவிட்டு. மறைந்தார் அந்தோ!

தமிழென்றால், அண்ணாவின் நினைவே தோன்றும்!
தமிழர்க்கே அறிவார்வம் வளர்த்த மேதை!
தமிழர்களின் வழிகாட்டி! புரட்சி யாளர்!
தமிழிளைஞர் பெரும்படையின் தலைவர் அண்ணா!
தமிழகத்துப் பெர்னாட்ஷா! அறிஞர் கோமான்!
தமிழர்களின் சிந்தனையின் சுடர்வி ளக்கு!
தமிழகத்து அரசியலில் மாட்சி சேர்த்தார்!
தனியாக நமைவிட்டு. மறைந்த தேனோ?

'நல்லவர்கள் வாழ்வதில்லை'— என்றே எண்ணி,
நானிலமே ஏங்குமாறு மறைந்தார் அந்தோ!
வல்லவராம் அண்ணாவை எண்ணி யெண்ணி,
வாயார அவர்புகழை வாழ்த்து கின்றோம்!
எல்லையில்லா அன்போடு தமிழ கத்தை,
எந்நாளும் முன்னேற்ற அவரு ழைத்தார்!
கல்லறையில் அவருடல்தான், மறைந்திட் டாலும்,
காலமெல்லாம் அண்ணாவின் புகழே வாழும்!

---

2-ம் பக்கத் தொடர்ச்சி

உழைப்பினாலும் போராட்டங்களினாலும்தான்!'' என்று பேசினால் ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்கு மட்டும் கோபம் வர நியாயமில்லை.

சென்னை உயர் நீதிமன்றத்தில் வெள்ளைக்காரர்கள், மலையாளிகள், தெலுங்கர்கள், இன்னும் பல்வேறு வகையானவர்கள் நீதிபதிகளாக இருந்திருக்கின்றனர். தமிழர்கள் அத்தகையதோர் நிலைமைக்கு உயர்ந்துவர பெரியாரின் போராட்டங்கள் உதவின. பெரியாரது பேச்சாலும், எழுத்தாலும் உந்தப்பட்ட தமிழர்கள் தங்களை இத்தகையதோர் நிலைக்கு உயர்த்திக் கொள்ள முடிந்தது. தமிழர்களுக்கு என்று பாடுபட்டவர் பெரியார் என்று பேசினால் அதற்கு, பெரியாரது பெருமையைச் சொன்னதாகப் பொருளே தவிர, அது வகுப்புவாதமுமல்ல; சாதிப் பேயைக் கட்டவிழ்த்துவிடுவதுமல்ல. பெரியாரைப் பாராட்ட வேண்டிய எவரும் அவர் தமிழ் மக்களுக்காகவும் தமிழ் மொழிக்காகவும் நடத்திய போராட்டங்களை, எழுதிய எழுத்துக்களை, பேசிய பேச்சுக்களைச் சொல்லத்தான் வேண்டிவரும் அந்த வகையிலேதான் பெரியாரைப் பாராட்டி நமது துணைவேந்தர் பேசியிருக்கிறார். (பேசவில்லை என்று மறுக்கிறார் திரு. சுந்தரவடிவேலு) இதற்கு வேண்டுமென்றே சாதிச் சாயம், வகுப்புவாதநிறம் பூச வேண்டாம் என்று விகடனை எச்சரிக்க விரும்புகிறோம்.

நீதிபதிகளைப்பற்றிச் சொன்னாலே நீதிக்குக் களங்கம் வந்துவிடும் என்பதையும் நம்புவதற்கில்லை. நீதிபதிகளைப்பற்றிப் பேசினாலே அவர்கள் புனிதத்தன்மைக்குக் களங்கம் வந்துவிடுமென்று சொன்னால் அது என்ன வித புனிதம்? விகடனுக்கே வெளிச்சம்!

1967 இல் அறிஞர் அண்ணா தலைமையில் அமைக்கப்பட்ட தன அமைச்சரவையைக் குறிப்பிட்டுச் சொல்லும்போது, "இந்த அமைச்சரவை பெரியாருக்குக் காணிக்கை" என்று அறிஞர் அண்ணாவே சொன்னார், விகடனுக்கு விளங்காமலா இருந்திருக்கும?

அண்மையில் தமிழக முதல்வர் திரு. கலைஞர் கருணாநிதி அவர்கள், "பெரியார் மருந்து தேவைப்படுகிறது'' என்று சொன்னாரே அது விளங்காமலா இருந்திருக்கும்?

பெரியாரே, 'இந்த அமைச்சரவையில் ஒரு பிராமணன்கூட இல்லை. இது முழுக்க முழுக்க தமிழர்கள் அமைச்சரவை என்று பேசினாரே— அது விளங்காமலா இருந்திருக்கும்?

எல்லாம் விகடனுக்கு விளங்கித்தான் இருக்கிறது. இருந்தாலும் 'விஷமம்' என்பது விகடனின் கூடப்பிறந்த குணமாயிற்றே! அதைவிட்டொழிக்க முடியுமா? வேதனைப்படுவதாகக் கூறி விஷமத்தைத் தொடங்குகிறார்கள்! எச்சரிக்கிறோம். வேண்டாம் இந்த வேதனை நிறைந்த விஷமம்! சிறுபொறிபெருநெருப்பாகக் கூடிய காலமிது! எனவே பொறுப்புள்ள ஒரு மனிதர் தான் அவ்விதம் பேசவில்லை; விவகாரத்தினை நிறுத்திவிடுங்கள் என்று கேட்டுக் கொண்ட பின்னும் தொடர்ந்து அவரைத்துன்புறுத்துவது தகாது. இவ்வளவு தூரம் எடுத்துச் சொன்ன பிறகாவது விகடனின் வேதனை தீருமென நினைக்கிறோம். விகடனுக்குப் பெரியார் மருந்து தேவைப்படாது எனவும் நம்புகிறோம்.

★



# அப்போதே சொன்னேன்...!

அறிஞர் அண்ணா அவர்களின் அரசியல் கலவாத கட்டுரை இது. சமுதாயத்தில் ஒருவன் தன்னை உயர்த்திக் கொள்ள எந்தெந்த வழிகளையோ கையாள்கிறான். அதிலே இதுவும் ஒரு வழி!

அறிஞர் அண்ணா

அப்போதே நான் சொன்னேன்......! என்று கூறிக்கொள்வதிலே, ஒரு அலாதியான மகிழ்ச்சி பலருக்கும் உண்டு.

எனக்கு முன்பே தெரியும்! நான் அப்போதே சொன்னேன்! என்று கூறிக்கொள்வதில் குதூகலம் காண்போருடைய உள்ளம், வேறுஒருவருக்கும் உண்மையை உணரும் திறம் கிடையாது, வேறு யாருக்கும் ஆராய்ந்தறிந்து இன்னின்னது நடக்கும் என்று கண்டறிந்துரைக்க முடியாது. அந்தத் தனிப்பட்ட திறமை தமக்கு உண்டு, என்ற எண்ணம் குடிகொண்டது.

இந்தப் போக்கு, பலரிடத்திலும் இருப்பதற்குக் காரணம், இதனால் பிறர் தம்மை வியந்து பாராட்டுவது கேட்பதிலே ஏற்படும் மகிழ்ச்சியும், இவருக்குத் தெரிந்தது, மற்ற எவருக்கும் தெரியவில்லையே! என்று கூறும்போது ஏற்படும் பெருமை உணர்ச்சியுமேயாகும்.

அப்போதே சொன்னேன் — என்று, ஆரஞ்சுப் பழம் அழுகிவிடும். அந்தி சாய்ந்ததும் மழை வரும், ஆலமரத்தில் கிளிப்பொந்து இருக்கும், என்ற இப்படிப்பட்ட விஷயமாகச் சொல்பவருக்கும் மகிழ்ச்சிதான், அடால்ப் ஹிட்லர் தோற்றுவிடுவார். அமெரிக்கா அணுகுண்டு வீசும், சுகர்ணோ லைசனா போவார், என்ற பெரிய விஷயமாகப் பேசுபவருக்கும் மகிழ்ச்சிதான் பிறக்கிறது.

புறப்படும்போதே சொன்னீர்கள் நான்தான், கவனிக்காமல் கிளம்பினேன். வழியில் நீங்கள் சொன்னபடியே, மழை கொட்டு கொட்டு என்று கொட்டிற்று, 'தொப்பக்கட்டை'யாக நனைந்து போனேன் — என்று ஒருவர் தம்மிடம் கூறும்போது, வெற்றிப் புன்னகையும் மேதாவிலாச ஒளியும் காட்டி, எனக்குத்தான் தெரியுமே! நான்தான் அப்போதே சொன்னேனே! மழை கட்டாயம் வரும்–நீ வீடுபோய்ச் சேருவதற்குள் மழை பலமாகும் என்று சொன்னேனே!—என்று கூறி இனியாவது நான் வருமுன் கூறுவேன் என்பதை அறிந்துகொள் என்று எடுத்துக்காட்டும் முறையில் பேசி மகிழ முடிகிறதல்லவா!

ஒன்றிரண்டிலே இதுபோல, வெற்றி கிடைத்துவிட்டால் போதும், தேவையிருந்தாலும் இல்லாமற்போயினும், கேட்டு மதித்திட ஆட்கள் கிடைப்பினும் கிடைத்திடாவிட்டாலும், எப்போதும், எதுபற்றியும், இப்படித்தான் நடக்கும்; எனக்குத் தெரியும்—என்று சொல்லி வைப்பதிலே ஒரு சுறுசுறுப்பு ஏற்பட்டுவிடுகிறது.

அப்போதே சொன்னேன்–என்று அடுக்களை விஷயத்திலிருந்து அகில உலகப் பிரச்சினை வரையிலே போக்குக்கொள்வோர் பற்றி எண்ணிப் பார்த்தால், மிகமிக வேடிக்கையாக இருக்கும்.

அப்போதே சொன்னேன்—பயலை ஜாக்ரதையாகக் கவனித்துவா, ஒரு மாதிரியாக இருக்கிறான் என்று—அந்த அப்பாவி என்பேச்சைக் கேட்டானில்லை, இப்போது அவன் மகன், நான் சொன்னபடியே, யாரோ ஒரு பெண்ணை 'ரிஜிஸ்தர்' கலியாணம் செய்து கொண்டானாம்—இப்போது அந்த அப்பாவி வந்து சொன்னபடியே நடந்துவிட்டது!'' என்று எனகுதான் தெரியுமே நான்தான் அப்போதே சொன்னேனே! என்று கிராமத்துப் பெரியவர் பேசிடக் கேட்கிறோம்.

ஒரு சமயம், அந்த வாலிபன் அதே நேரத்தில் தன் துணைவியிடம், ''எனக்குத் தெரியும்—நான்தான் அப்போதே சொன்னேனே—என் அப்பா ஒரு கருநாடகப்பேர்வழி'' என்று பேசிக்கொண்டிருக்கக் கூடும்.

பெண்ணின் கன்னத்தைக் கிள்ளியபடி, அவள் தோழி ''அப்போதே சொன்னேனல்லவா! ஆறுமுகம் அசகாயசூரன்—அப்பா எதிர்த்தாலும், ஊரே எதிர்த்தாலும், அவன் உன்னைத்தான் கலியாணம் செய்துகொள்வான் என்று சொன்னேனல்லவா! எனக்கு முன்பே தெரியும்!''—என்று சொல்லிச் சிரித்துக் கொண்டிருக்கக்கூடும்.

அப்போதே சொன்னேன்! நெல் விலை ஏறப்போகுது — அவசரப்பட்டு விற்றுவிடாதே என்று—கேட்டானா? இப்போது கையைப் பிசைந்துகொள்கிறான்—என்று தரகுக் கடையில் நடமாடும் பேர்வழி சொல்கிறார்.

அப்போதே சொன்னேன்–ஆசாமியோட பளபளப்பும் முடுக்கும் பார்த்தால் எனக்குச் சந்தேகமாக இருக்கிறது—இவனுக்குப் பணம் கிடைத்ததிலே ஏதோ சூட்சமம் இருக்கிறது என்று சொன்னேன்–இப்போது அந்தப் பயல் திருட்டு நோட்டு போட்டான் என்று போலீசில் பிடித்துக்கொண்டார்கள் தெரியுமா, என்று. ஆளைக் கண்டதும் நோட்டம் பார்த்துக் கண்டறியும் நுண்

ணறிவு தமக்கு இருப்பதாக எண்ணிக்கொள்பவர் கூறுகிறார். அதேபோது, திருட்டு நோட்டு போட்டதாகக் கைது செய்யப்பட்டவனுடைய நண்பன், எனக்கு முன்பே தெரியும்! அப்போதே சொன்னேன்! வேண்டாமடா வெங்கிட்டு, போலீசைப் பகைத்துக்கொள்ளாதே, மொட்டைப் பெட்டிஷன்' எழுதாதே—ஏதாவது ஒரு பழி சுமத்தி உன்னைப் பிடித்துப் போட்டுவிடுவார்கள்—என்று சொன்னேன், கேட்கவில்லை, என்று கூறி வருத்தப்படுகிறான்.

எனக்கு முன்பே தெரியும்! அப்போதே சொன்னேன்—அடே அப்பா! வெங்கிட்டு! உனக்கு ஏழரை நாட்டான் இப்பத்தான் கடுமையான கட்டத்திலே இருக்கிறான், ஜாக்ரதை, ஜாக்ரதை, கண்டவனோடு சேர்ந்து சுற்றாதே என்று தலைப்பாடாக அடித்துக் கொண்டேன். கேட்கவில்லையே. போறாதவேளை!—என்று கூறி வெங்கிட்டுவின் தாயார் புலம்புகிறார்.

அப்போதே சொன்னேன், சார்! 66-கொண்டு வருகிற 'கேஸ்' எப்போதும் இப்படித்தான். அடியும் இருக்காது, நுனியும் இருக்காது—என்று 66-மீது 62, 'இன்ஸ்பெக்டர் ஐயா'விடம் கூறிக்கொண்டிருக்கிறார். வெங்கிட்டுமீது குற்றம் ஏதும் ருஜு ஆகவில்லை—விடுதலை பெறுகிறான். உடனே அப்போதே சொன்னேன் என்ற, பேச்சு ஆரம்பமாகிவிடும்.

"அப்போதே சொன்னேன்—அகிலாண்டம்! ஆயாசப்படாதே! ஏதோ விஷக்கடி வேளை இது. உன்னோட புண்யம் வீண்போகாது, வெங்கிட்டுவுக்கு ஒரு கஷ்டமும் வராது" என்று மணியம் மந்திரமூர்த்தி சொல்லுகிறார்; சொல்லிவிட்டு, வேறோர் வீதியில் தர்மகர்த்தா தாத்தாச்சாரியாரைப் பார்க்கிறார்—பார்த்ததும், "நான் அப்போதே சொன்னேனே! பார்த்தீர்கள் அல்லவா. பயல் தப்பித்துக்கொண்டான். ஏகப்பட்ட செலவாம். பணம் பாதாளம்வரை பாயுமல்லவா! வெங்கிட்டு, திருட்டு நோட்டு போடவில்லை என்று கூறிவிட்டார்கள்" என்று பேசுகிறார். "அப்போதே சொன்னேன்—பார்த்தாயா? ஏதாவது துளிருஜு கிடைச்சுதா போலீசுக்கு...நம்ம வேலை அப்படி தெரிகிறதா?" என்று வெங்கிட்டு வேறோர் இடத்தில், தன் கூட்டாளியிடம் இரகசியமாகப் பேசுகிறான்.

"அப்போதே சொன்னேன்—அவசரப்பட்டு அந்தப் பயலைப்பிடிக்கக் கூடாது—நமக்குக் கிடைக்கவேண்டிய ருஜு மறைந்துவிடும் — அவசரப்படாமல், செய்ய வேண்டும் என்று சொன்னேன், கேட்கவில்லை என்று இன்ஸ்பெக்டருக்குத்துப்பறியும் அதிகாரி அறிவுரை கூறுகிறார்.

இதுபோல, இந்த "அப்போதே சொன்னேன்" என்ற பேச்சு, எங்கு பார்த்தாலும், வகை வகையான போக்குடன் அடிபட்டுக்கொண்டே இருந்திடக் காண்கிறோம்.

அவ்வளவும், தாம் மேதாவிகள் என்பதைக் காட்டிக்கொள்வதிலே ஏற்படும், அற்ப சந்தோஷம் காரணமாக ஏற்படுவதுதான்.

அப்போதே சொன்னேன்—என்ற பேச்சை நம்பிச் சில வேளைகளிலே ஏமாந்துவிடுபவர்கள் முகத்திலே அசடு வழியக் காணலாம்—என்னமோ அப்படி நினைத்தேன்—அதனால் என்ன? நான் என்ன 'திரிகால ஞானியா? என்றெல்லாம் கேட்டுத் தமது கோபத்தைக் கொட்டுவார்கள்.

ஐயா! வெள்ளைக்காரன், அதிக நாளைக்குத் தாக்குபிடிக்க முடியாது, விட்டுவிட்டு ஓடவேண்டியதுதான், நாடு இருக்கிற கொதிப்பு சாமான்யமானதல்ல—இதைச் சதா சர்வகாலமும் அடக்குமுறையாலே ஒடுக்கிவைப்பதென்பது முடிகிற காரியமல்ல. சுயராஜ்யம் கட்டாயம் கிடைத்துவிடும் என்று சொன்னது கேட்டு இடி இடியெனச் சிரித்துவிட்டு, வெள்ளைக்காரனாவது! பீரங்கியும் வெடிகுண்டும் வைத்துக் கொண்டிருப்பவன் தக்ளிக்கும் ராட்டைக்கும் பயந்துகொண்டு நாட்டைவிட்டு ஓடுவானடா, பயலே! சொல்பவர் சொன்னாலும் கேட்பவருக்கு புத்தி இருக்கவேண்டாமா! வெள்ளைக்காரனாவது வெளியே போய்விடுவதாவது" என்று அழுத்தந்திருத்தமாகப் பேசினார் ஒருவர். அரசியல் கொந்தளிப்பு நமக்குக் காட்டும் பாடத்தைக் கூறினோம்' இந்த முதியவர் ஒரே அடியாக இப்படிப் பேசுகிறாரே, ஒரு சமயம் இவர் கூறுவதுதான் உண்மையாக இருக்குமோ—அனுபவம் உள்ளவராச்சே—என்று அந்த இளைஞன் எண்ணிக்கொண்டான். சுயராஜ்யம் கிடைத்து—சுயராஜ்யம் கிடைக்கவே கிடைக்காது என்று பேசின முதியவரைப்போய் பார்க்கவேண்டும், முகம் எப்படி இருக்கிறது என்று காணவேண்டும் என்று இளைஞன் வேகமாகச் சென்றான். முதியவர் மற்றோர் முதியவரிடம் பேசிக்கொண்டிருந்தார். சுயராஜ்யம் கிடைக்கவே கிடைக்காது என்று பேசியஅதே முதியவர் "அப்போதே சொன்னேனல்லவா, எனக்கு முன்பே தெரியும்! வெள்ளைக்காரன் உதைக்கிறான்—இன்னொரு பக்கம் ரஷியாக்காரன் மிரட்டுகிறான்—இங்கே நம்ம தேசம் சீறிப் போராடுது—எவ்வளவுதான் வெடிக்குண்டு இருந்தாலும், இவ்வளவு விரோதத்தையும் சமாளித்துக்கொண்டு எப்படி வெள்ளைக்காரனாலே தப்பிப் பிழைச்சு, தர்பார் நடத்த முடியும்? அப்போதே சொன்னேனே, பார்த்தயா! வெள்ளைக்காரன், மூட்டை கட்டிவிட்டான்!" என்று வீராவேசமாகப்பேசிக்கொண்டிருக்கிறார்.

இளைஞன் திகைத்துப்போகாமல் என்ன செய்வது!

அப்போதே சொன்னேன்—என்ற மாமந்திரத்தை, பல்வேறு முறைகளிலே பயன்படுத்தி வைத்துவிட்டால் சொன்னதிலே ஏதாவது ஒன்று நடைபெற்றே தீரும்—உடனே, அப்போதே சொன்னேன்! என்று பிரதாபம் பேசலாம்!

சிலர், இதனைக் கலையைவிட நேர்த்தியானது ஆக்கிக்கொண்டு உள்ளனர். அவர்கள் அரசியலில் ஈடுபட்டு இந்த முறையைத் திறம்படப் பயன்படுத்தவும் செய்கிறார்கள். ஆகவே, இது நாம் அனைவரும்கூடக் கையாளவேண்டிய 'வித்தை' என்று 'சிபாரிசு' செய்வதாக யாரும் எண்ணிக்கொள்ள வேண்டாம்.

நம்மாலே 'ஜீரணிக்க' முடியாது—சிலருக்குக் 'கல்குடல்' என்பார்களே அதுபோல — எதையும் கூறி எப்படியும் வளைத்து எந்த விதத்திலும் 'வெற்றிக்கொடி' நாட்டியதாகக் கூறிக்கொள்ள முடியும்.

நமக்கு அது தேவையில்லை; ஆனால் 'அப்போதே சொன்னேன்' என்ற பேச்சுக்காரரைக் காணும்போது வழுக்கு நிலத்தைக் கண்டால் எப்படிக் கவனிப்புடன் நடப்போமே, அதுபோல்அவர்களிடம் நடந்துகொள்ள வேண்டும்.

'அப்போதே சொன்னேன்' — என்பதை, யாரிடம் எப்படி எப்படிக் கூறிவைத்திருக்கிறார்களோ நமக்கென்ன தெரியும்.

வெங்கிட்டு, கதையைப் பார்த்தால், வேடிக்கை மட்டுமல்ல, அப்போதே சொன்னேன் என்ற போக்கிலே புதைந்து கிடக்கும் இலக்கணமும் புரியும்.

அதற்காகவே இது.

# சமயல்காரி

—ரெ. விஜயராகவன், M.A.—

மனைவி, துணைவி என்பார்கள். இவள் துறவியாக இருப்பாள் என்று தெரியாமல் போய்விட்டது. தெரிந்திருந்தால் நானே துறந்திருப்பேன். தனிமரமாக வாழ்ந்து கொண்டிருக்கலாம். தனிமரம் காற்று, மழை புயலுக்கு அஞ்சுகின்றதா? ஆனால் தனிமரம் பூங்காவனமாகுமா? அதனால்தான் இவளை மணந்தேன். ஒன்றும் குற்றம், குறை கூற முடியாது; காணுவதற்கில்லை. ஆள் நல்ல அழகு. வேலையிலும் சோடை இல்லை. சுவையான சமையல், சுவையோடு ஊட்டியும் விடுவாள் சிரிப்பு, பேச்சுடன். நாக்கிற்குமட்டும் ருசி, சுவை நாடி இருக்கிறதே. அதை அறியாதவளா? சரி, நாமாக அறிய வைப்போம். நாளாக ஆக எல்லாம் சரியாய் வரும் என்று தினந்தோறும் தீனி, தின்பண்டம், பழங்கள் வாங்கி வருவேன். பால் காய்ச்சி பதமாகக் கொண்டு வருவாள். குழந்தை, குட்டி தொல்லை இல்லை. கொசுத் தொல்லை, மூட்டைப் பூச்சி எதுவும் கிடையாது. மற்றவர்கள் வீடு போல மாமியார் மாமன் சண்டை, சச்சரவு கிடையாது. நண்பர், உறவினர் யாரும் வருவதில்லை. எங்களுடைய இன்பத்திற்கு இடையூறாக யாருமே இல்லை. நவீன காலத்து ராபின்சன் குருசோ—திருமதி ராபின்சன் குருசோ என்று கூடத் தெரிந்தவர்கள் சொல்லக் கூடும்.

மகிழ்ச்சி, மனை நிறைந்த—அவள் மனம் நிறைந்த மகிழ்ச்சி. அவளைப் பொறுத்தவரை அப்படி. என் நிலை, உள்ளத்தே உவகை கிடையாது, ஆனாலும் உள்ளவன் போலவே காட்டிக் கொள்வேன். இவளை மணந்தபின்தான் அவ்வாறு நடிக்கவும் கற்றுக்கொண்டேன்.

ஆடை, ஆபரணங்களை வாங்கி வருவேன். அணியச் சொல்வேன். செய்வாள். சில சமயங்களில் நானே பாவாடை முதல் 'பவுடர்' வரை உடுத்தி—போட்டு, நெற்றியில் பொட்டு, கொண்டையில் பூ வைத்து' முன்னும் பின்னுமாக உள்ள கண்ணாடி நடுவே அவளை நிறுத்தி, நானும் அருகில் தோள் மேல் தோள் கைபோட்டு நிற்பேன். கன்னத்தை மெல்லக் கிள்ளி 'எப்படி என்பேன். அவள் பதில் கூறுவதற்கு முன், 'நீ தேவதை' என்று சொல்லி அவளின் அழகையே அழகின் அமுதத்தையே பருகிக் கொண்டிருப்பேன். நான் மகிழ்வேன், அவள் சிரிப்பாள். அவ்வளவுதான். பால்—பழம் கொடுப்பாள். குடிப்பேன்; தின்பேன்; 'நீயும் தின்னு' என்று அந்த அலங்காரப் பதுமையின் கரங்களைப் பற்றுவேன். 'முதலில் நீங்கள் பிறகு நான்' என்பாள் நழுவியவாறே 'சினிமாவிற்குப் போவோமா' செல்லமாகக் கேட்பேன். சொல்லமாட்டாள். தலையை மட்டும் ஆட்டுவாள் மாட்டேன், என்பது பொருள். இவள் "ஓல்டு மாடல், மாடர்ன்" அல்ல என்று நினைத்து, அவள் கரம் பற்றுவேன். கட்டி அணைக்க முயல்வேன். இங்கேதான் கதை சொல்ல ஆரம்பிப்பாள்.

அது வாழ்க்கையோடு ஒட்டியதாகத்தான் இருக்கும். 'நம்ம வீட்டிலே இன்று சோறு இல்லை என்று வைத்துக்கொள்ளுங்கள் என்ன செய்வீர்கள்?' என்று ஒரு கேள்வி கேட்பாள்.

'போய் ஓட்டலில் சாப்பிடுவோம்' என் பதில். 'போய் சாப்பிடுவேன்' என்று சொல்லுங்கள். ரூபாய் நூறை நீட்டுவாள் போய் வேண்டிய அளவு விரும்பியபடி சாப்பிட்டு வாருங்கள் என்று சிலேடையாகவே.

'வீட்டில் இல்லாவிட்டால் தானே' என் வினா. அதற்கும் ஒரு உதாரணம் காட்டிச் சமாளிப்பாள். இன்று அருமையான, சுவையான சமையல் என்றே வைத்துக்கொள்ளுங்கள். என்னையும் அறியாமல் பல்லி சோற்றிலோ குழம்பிலோ தவறிக் கிடந்துவிட்டால் சாப்பிடுவோமா? என்று என்றோ ஒரு நாள் நடந்த நிழற்படம் போன்ற காட்சியைக் கண் முன்னால் நிறுத்துவாள்.

ஆறாண்டு காலத்தை இவ்வாறே ஓட்டினாள். ஏன் நானும் தள்ளினேன். நாக்கிற்கு மட்டும் சுவையூட்டும் இவள் நாடித் துடிப்பிற்கு மட்டும் இடமளிக்க மறுப்பானேன்? மனம் சந்தேகம் கொண்டது. ஒரு கால் பெண்மையற்றவளாக இருப்பாளோ? எண்ணியது என் உள்ளம். நானும் இன்றில்லை, நாளை உண்டு உண்டு என்றே நாட்களைக் கழித்து வந்தேன். கல்யாணம் எதற்காக? கட்டியவளை வெட்டியாகப்பார்த்துக் கொண்டிருக்கவா? கட்டியணைக்க வல்லவோ? காதல் முத்தம் தர, பெறத்தானே! கண்மணிகளைப் பெற வல்லவோ ஓர் நாள் கல்யாணம்! -

'சீதை போல கட்டிய மனைவி இருந்தாலும் குரங்கு போன்ற ஒரு வைப்பாட்டி தேவை என்பார்கள் ஆடவர்கள். நீங்கள் அந்த ரகமில்லையா? கேள்வி கேட்பாள்.

கணவனைப் பார்த்துக் கேட்க வேண்டிய கேள்வியா இது? நான் தவறாக நடந்தாலும் திருத்த வேண்டிய கடமை இருக்க, வருத்தப்படுகின்றாயே. நான் பிறர் 'எச்சிலை' விரும்புவதில்லை என்றேன்,

'என்னை அந்த எச்சில் என்று நினைத்துக் கொள்ளுங்கள்'

சுருக் என்றது. தங்க ஊசியே தாங்காத அளவிற்கு இதயத்திலே தைத்தது, 'இது உச்சகட்டம் கண்ணம்மா' உளறி தரையில் சாய்ந்தேன். தாயின் உடலைவிட்டுப் பிரியும் குழந்தையின் தொப்புள் கொடி போல என் உறவு அவளிடமிருந்து அறுந்தது.

அவள் இதற்கு முன்னால் தனக்கென்று ஒரு பாய் எனக்கென்று ஒரு பாய் என இரண்டு பாய்கள் விரிப்பாள். விரித்தாள். இரண்டு பேர் தானே ஒரு பாய் போதாதா என்று கேட்டால் என் கால் கை உங்கள் உடம்பில் பட்டுவிடுமோ என்பதற்காகத்தான் என்பாள். மரியாதை உடைய மனைவியைப் பெற்றிருக்கிறேன். ஆனால் மழலைக் குழந்தைப் பெற நான் மனைவி பெறவில்லையே. கால் மிதி படாமல் மண் கலயமாகுமா? என்று நானாக யோசித்துப் பாயைத் தூக்கி எறிந்துவிட்டு மெத்தையும் ஒரே ஒரு கட்டிலும் அன்றே வாங்கினேன்.

மெத்தை சூடு, உஷ்ணம் அதில் படுத்தால் எனக்கு உறக்கமே வராது. கீழேயே தரையைக் கூட்டிப்புட்டு துரைபோல உறங்கலாம் என்றாள்.

மெத்தை உறங்க வாங்கவில்லை. உடல் உறவு கொள்ளத்தான் ஒரே ஒரு கட்டில்வாங்கினேன் என்றேன். அத்தை மகளோடு உறவு கொள்ளலாம்; அட்டைப் பூச்சியோடு உறவு கொள்ளமுடியுமா?

அவளது கேள்வி புதிராகவே இருந்தது, புதியதும்கூட!

ஒரு மகன் தன் தாயிடம் சுவையான சமையலையும் அன்பையும் தவிர வேறு எதையும் எதிர்பார்க்க முடியாதது போல ஒரு தலைமகன் சமையல்காரியிடம் வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது என்று கொஞ்சம்கூட இதயங் கலங்காமல் சொன்னாள். என் இதயமோ மேல் பாதி கீழ்பாதி என இரண்டாகவே பிரிந்துவிட்டது போன்ற உணர்வு பெற்றது.

கண்ணம்மா இப்போ என்னம்மா சொல்கிறாய்?

இந்தச் சிறு விஷயம்கூடப் புரியவில்லையென்றால் நீங்கள் அறிவிலிதான்.

மழைக்கு ஒதுங்கிய மரத்திலேயே இடி விழுந்தது போன்றிருந்தது எனக்கு.

மூர்ச்சையாகி மயக்கம் போட்டுக் கிடந்தேனாம். நீர் முகத்தில் தெளித்துத்தன்முன்தானையாலேதுடைத்து என்னை மடியில் இட்டு முன்தானையாலே காற்றும் உண்டாக்கினாளாம். ஆடைகளை அவளே தளர்த்தினாளாம். என்னை நெஞ்சில் கிடத்தி குளிர்ச்சியும் வெப்பமும் தந்தாளாம் கண்களை மெதுவாகத் திறந்து பார்த்தேனாம்,

ஆம் கண்களைத் திறந்து பார்த்தேன். என் நினைவிற்குப் பின் இத்தனையும் சொன்னாள்.

'சமைத்துப்போட ஒரு ஆள் தேவை' இது தங்களுடைய விளம்பரம். என் போட்டோவையும் அனுப்பி வைத்தேன். சமைத்துப் போடத்தானே போகிறோம் என்ற எண்ணத்தில் சம்சாரியாக வாழ இறைவன் என்னை அனுமதிக்காவிட்டாலும் சமையல்காரியாகவாவது வாழ வழி வகுத்திருக்கிறானே என்ற சந்தோசத்தில் வந்தேன். சமைத்தேன் சுவைத்தீர்கள். சமையல் சுவை சம்சாரச் சுவையில் திரும்பியது அதுவும் சரிதான் என்று உங்கள் மனம் மாறாமல் மணந்தும் கொண்டேன். இந்தக் கழுத்துக் கயிறு வயிற்றை நனைக்க உதவியது வாழ்வை நடத்த உதவியது ஆனால் வாழ்வை நிலைக்க வைக்க உதவாது போலிருக்கிறது...

அப்படி என்ன நடந்துவிட்டது கண்ணம்மா?

ஆண்கள் ஆயிரம் பெண்களைக் காணலாம்; காதலிக்கலாம். அவர்கள் ஆயிரம் குற்றம் குறைகள் செய்யலாம். அவைகள் அன்று பிறந்து அன்றே மடியும் ஈசல்போல மறைந்துவிடும், அம்பலமாகாது. ஆனால்.........என்று நிறுத்தி "ஓ"வென்று அழுதாள். மெத்தையின் மேல் சாய்ந்தாள். நல்ல வேளையாக அவள் மூர்ச்சையாகவில்லை. அவள் எங்கோ அனுபவம் பெற்றவள் போலிருக்கிறது. அத்தனையும் தாங்கிக் கொள்கிறாள். பின் அவளாக எழுந்து என்னை மன்னிப்பீர்களா மன்னிப்பீர்களா என மன்றாடினாள். பெண்ணல்லவா? பேயே மனம் இரங்கும்போது நான் மட்டும் என்ன? மனித இதயம் கொண்டவன் தானே! சும்மா சொல் என்றேன்.

என்னைக் கொன்று விடுங்கள். என் உயிரைக் குடிக்க எனக்கு உரிமை இல்லை. அந்த அதிகாரம் உங்களுக்கு உண்டு. ஆறு ஆண்டுகள் ஓடி மறைந்தன. ஒரு நாள்கூட பலாத்காரமாக என்னைத் தொட முயன்றதில்லை நீங்கள். உங்களின் பாசக் கரங்கள் என்னைப் பற்றும்போது பரவசப் பட்டதுண்டு. உணர்ச்சிவயப் பட்டதுண்டு. புணர்ச்சிக்கு மட்டும் இடம்தர மறுத்தேன். காரணம்...நான் கல்லூரியில் பயிலும்பொழுது ஒருவரைக் காதலித்தேன். கடிதம் எழுதினேன். பதில் கடிதம் எழுதமாட்டார். நேரில் பேசுவார். நேர்மையானவர். சகோதரப் பாசம்தான் அவர் பேச்சில் மூச்சில் செயலில் எல்லாம். என் கடிதமெல்லாம் காதல் மணம் தான் வீசும். ஒரு நாள் 'நீ என்ன பைத்தியமா' என்று என்னைக்கேட்டதும் தான் நீண்டகடிதத்தில் கடைசி வரியாக "என்னைத் தங்களின் தாரமாக அல்லது தங்கையாகவாவது ஏற்றுக்கொள்ளுங்கள்" என்ற வாக்கியததை அமைத்தேன். "தாரமாக......" என்ற சொல்லிற்கடியில் கோடிட்டு அதே கடிதத்தைத் திருப்பி அனுப்பி இருந்தார். காதலில் வென்றேன் என்று களிப்புற்றிருந்தேன். கருவுற்றேன்; தாலி இல்லாமலே சிசு வளர்ந்தால் இவர் தப்பமுடியாது என்று தப்புக் கணக்குப் போட்டேன். குழந்தைப் பேறு மாதம். என்னைப் பிரசவ மனையில் சேர்த்தார். நாள் வந்தது. பக்கத்திலே இருக்கிறாரே, பாசத்துடன் இருக்கிறாரே, மனம் ஒன்றானால் மலையைக்கூட அசைக்கலாம் என்ற அதிக நம்பிக்கையிலே இருந்து விட்டேன். 'மகன் பிறந்து விட்டான். அவரைக் கூப்பிடுங்களம்மா' என்றேன். நரசு சுதா வெளியில் சென்று சுற்றிப் பார்த்துவிட்டு 'இல்லைமா' என்றாள். அவர் பெயர் என்னம்மா அப்பவாவது ஆள் கிடைப்பாரா என்று பார்ப்போம் என்றாள். வெண்ணை திருடும்......அவர்தான் என்றேன். நர்சு வெறுங்கையோடவே வந்தாள். ஏமாற்றி விட்டார் சுதா என்றேன். 'ஓ இது கடற்கரை காதல் கேஸா' என்று முணுமுணுத்துக்கொண்டே அவளது கடமையில் ஈடுபட்டாள். "கண்ணம்மா, கடற்கரை மணலால் ஆனது. ஆனால் ஒரு சிறிய குளத்தங்கரை கெட்டியாய் வலுவாய் உள்ளது" அவள் எனக்கு பாடம் கற்றுத்தந்தாள்.

குழந்தையை அனாதை விடுதியிலே சேர்த்துவிட்டேன், கண்மணி அங்கே வளர்கிறான். அப்படி ஒரு முறை வாழ்க்கையில் தவறியவள் மறுபடியும் தவறக்கூடாதே என்பதற்காகத்தான் புணர்ச்சிப்பழகுதல் வேண்டாமென்று ஒதுங்கி வாழ்ந்தேன், சித்தாளு வேலை பார்த்து வயிற்றைக் கழுவி வரும் சமயத்தில்தான் தங்களின் விளம்பரம் பார்த்தேன். தங்களிடம் வந்தேன். மணந்தேன். மனைவியும் கணவனுமாக இல்லை; துறவியும் துறவியும் போல வாழ்ந்தோம். ஏனென்றால் ஒருமுறை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட நரி அடுத்த முறை வெள்ளம் வரும் என்று பள்ளத்தைக் கண்டு ஒதுங்கி நிற்கவேண்டாமா?'

"போதும் கண்ணம்மா, கண்மணியை அழைத்துவரலாம் வா" என்று கரங்களைப் பற்றியவாறே புறப்பட்டேன். "கண்ணு, மலர்ந்திருக்கும் பூ வண்டிற்காகத்தான், அதற்காக வண்டைத் தேடிச் செல்லும் வழக்கமில்லை; அது இயற்கையுமாகாது. வண்டு பூவைநாடுவதுதான் முறை, ஒரு வண்டு பல மலர்களில் தேன் குடிக்கிறது, ஆனால் ஒரு மங்கையை பல ஆடவர்கள் சுற்றுவார்கள். ஒருவர்தான் இடம்பெறுவார், இங்கே இதயம் உண்டு, அங்கே இதம் மட்டும்தான் உண்டு, மானிடப் பெண் பூ உறவுத் தேனைப் பருகும், உதட்டுத் தேனைக் கொடுக்கும். சிறியதைக் கொடுத்து பெரியதை வாங்கும் தன்மையது மனிதப் பெண் பூ....." கேட்டுக்கொண்டே தன் கண்களிரண்டையும் அனாதை இல்லத்தே நோக்கினாள் கண்ணம்மா. போட்டாவையே பார்த்துக்கொண்டிருந்த கண்மணி நேரில் வந்ததும் தாவி அணைத்தான் அம்மா என்றவாறே. வாரி அணைத்தாள், அவர்தானடா கண்மணி உன் அப்பா என்றாள். கண்ணன் அங்கே இல்லை. நான்தான் நின்றுகொண்டிருந்தேன், அ...ப்...பா...என்றான். வாங்கி முத்தம் கொடுத்துக்கொண்டிருந்தேன். என் முகத்தோடு முகம் வைத்திருக்கும் கண்மணிக்கு முத்தமிடுபவள் போல என் உதடுகளில் அவள் இதழ்களின் தேனைச் சிந்தினாள். அந்தத் தேன் இன்னும் இனித்துக் கொண்டே இருக்கிறது. ஏனென்றால் அவளுடைய முத்தம் என்னிடம் அவனை ஏற்றுக்கொள்ளச் சொல்லியது தாரமாகவே,

# கல்

—இறைவன்

தேன்தொங்கும்! சவுக்கைக்காய் பெருத்தாற் போன்று
தித்திக்கும் பலாவினங்கள் தொங்கும்! நீல
வான்தொங்கும் விண்மீன்போல் மாவும் தொங்கும்!
வனிதையரின் மார்பகம்போல் தெங்கும்!
தொங்கும்!
பேன்தங்கும் உடல்கொண்ட மந்திக் கூட்டம்
பெரும்வாழைப் பழம்சிந்தும்! அந்த நாட்டில்
'ஏன்தங்கும் வறுமைநோய்?' என்று நாளும்
எழில்தங்கச் செய்தவன்தான் பேகன் என்பான்!

முகில்கூட்டம் மொய்த்திருக்கும்! அவைகள் சிந்தும்
மும்மழையால் வளங்கொழிக்கும்! பெண்கள்
போடும்
அகில்மூட்டம் மொய்த்திருக்கும்! மழையி னோடு
அவைகலந்து தெருவெல்லாம் மணக்கும்! என்றும்
நகில்வாட்டம் கொள்ளாதப் பருவப் பெண்கள்
நலங்காட்டும் பேகன்வாழ் நகரோ! ஆகா!
துகில்போட்டு மூடாத இளமை போன்று
துலங்கியது! அந்நேரம் காலை நேரம்!

சிரித்தபடி அரியணையில் பேகன் வந்து
செங்கோலைப் பிடித்தபடி அமர்ந்தான்! பேச்சைக்
கொரித்தபடி அமர்ந்திருந்த அவையோர் எல்லாம்
கொற்றவன்முன் எழுந்தபடி நின்றார்! மக்கள்
நெரித்தபடி மன்னனவன் உரையைக் கேட்க
நின்றபடி முன்நகர்ந்த நேரம், ஓலை
பிரித்தபடி ஓர்புலவன் உள்ளே வந்தான்!
பேகன்உள் நுழைந்தவனை நிமிர்ந்துப் பார்த்தான்!

"யார்?"என்றான் பெரும்வள்ளல்! "புலவன்" என்றான்!
இருவிழியால் வந்தவனைப் பார்த்து "என்ன
பேர்?" என்றான்! வந்தவனோ "பரணர்" என்றான்!
பெரிதாகச் சிரித்தபடி மன்னன் "தேங்காய்
நார்கொண்டு பரண்கட்டி தினைப்பு னத்தின்
நலங்காக்கக் கிளியோட்டும் பரண ருக்குச்
சீர்கொண்டு தனைகொண்டு பாடல் தீட்டும்
திறன்வந்த தெங்கனமோ?" என்று கேட்டான்!

"நிலம்பார்த்து மழையென்றும் பொழிவ தில்லை!
நிழல்பார்த்து நிலவுஒளிப் படர்வ தில்லை!
கலம்பார்த்து நீர்என்றும் புகுவ தில்லை!
கற்கண்டும் வாய்பார்த்துச் சுவைப்ப தில்லை!
குலம்பார்த்துக் கவித்திறமை வருவ தில்லை!
கோவேந்தே! இதுவுனக்கேன் தெரிய வில்லை?
பலம்பார்த்தும் கொடுக்கின்ற பதவி டார்த்தும்
பணம்பார்த்தும் இத்திறமைப் பணிவ தில்லை!"

"கழிகொண்டு பரண்அமைத்துத் தினைப்பு னத்தைக்
காக்கின்ற பரணன்நான்! எனினும் பாடல்
மொழிகொண்டு காட்சிகளை விளங்க வைக்கும்
முறைதன்னை அறிந்தவன்தான்" என்றான்! தூற்றும்
பழிகொண்டு வாழ்வதற்கு அஞ்சும் மன்னன்
பாவலனைப் பார்த்தபடி "எத்த லைப்பின்
வழிகொண்டும் பாடுவையோ பாடல்?" என்றான்!
வந்தவனோ "இதிலென்ன ஐயம்" என்றான்!

மண்ணசைத்துப் புகழ்பரப்பிப் பகைவர் தம்மை
மரணத்தின் வாசலுக்கு அனுப்பும் பேகன்
கண்ணசைத்து ஆணையிட்டான்! வீரன் சென்று
கல்லொன்றை எடுத்துவந்து முன்னே வைத்தான்!
"பண்ணசைத்துப் பாப்பாடும் புலவ! கல்மேல்
பாட்டொன்று பாடென்றான்! இளமைப் போதில்
எண்ணசைத்து எழுத்தசைத்துக் கற்றோன் இன்றோ
யாப்பசைத்துக் கல்பற்றிப் பாட லானான்!

"எழில்பெய்து கல்லென்னும் தலைப்பில் பாடல்
எழுதென்று பணித்தவனே! கொடுக்கல் வாங்கல்
தொழில்செய்ய வந்தவனை உரைகல் இட்டு
சோதித்துப் பார்க்கின்றாய்! நல்வாழ்க் கைக்கு
வழிசெய்து நீஇரங்கல் வழங்கல் மூலம்
வளப்படுத்து! இல்லையென்றால் கண்ணீர்ப்பொங்கல்
விழிசெய்துக் கொண்டிருக்கும்" என்றான்! கேட்டு
வேல்வேந்தன் "ஏங்கல்ஏன்? விடுக!" என்றான்!

"மனம்முடக்கல் புலன்அடக்கல் மூலம் புத்தன்
மனத்தாசை தனைவிலக்கல் செய்தான்! மாற்று
இனம்ஒடுக்கல் படைஎடுக்கல் மூலம் சேரன்
இமயக்கல் தனைகொண்டு வந்தான்! பொன்னைத்
தினம்கொடுக்கல் துயர்துடைக்கல் மூலம் பாரி
'சிறந்தவள்ளல்' எனவழங்கல் பெற்றான்! நீயும்
சினம்விடுக்கல் அருள்படைக்கல் மூலம் நாட்டில்
தெய்வம்போல் புகழ்பெருக்கல் செய்துக்
கொள்வாய்!"

வடக்கிருக்கும் இமயக்கல் உன் ஆட்சிக்கு
வணங்கிநிற்கும் எல்லைக்கல்! மக்கள் நாவில்
நடம்புரியும் வாழ்த்துக்கள் எல்லாம் உந்தன்
நலங்காட்டும் புகழுக்கு மைல்கல்! மாற்றார்
இடம்புரியும் போர்க்களத்தில் உனது தோள்கள்
எதிரிகளை அரைக்கின்ற அம்மிக் கல்!பின்
திடம்வாய்ந்த பகைநாட்டான் மதிற்கல் லோஉன்
திருவடிகள் மிதிக்கின்ற படிக்கல் ஆகும்!

அறங்கெடுக்கும் கயவரெல்லாம் நடிப்பின் மூலம்
அருளாளர் எனத்திரிதல் போன்று; வீட்டுப்
புறங்கிடக்கும் மண்ணெல்லாம் செங்கல் என்றப்
புதுப்பெயரில் திரிகிறது" என்றான்! மேலும்
"நிறங்கண்டு மலைக்கல்லைக் கருங்கல் என்றார்!
நிலத்தினிலே குழாமாகக் கிடைப்ப தாலே
திறங்கண்டு பரல்கல்லைக் குழாங்கல் என்று
செப்பினர்நம் முன்னோர்கள்" என்று சொன்னான்!

"கல்லென்னும் பெயரேனோ வந்த தெ"ன்று
காவலனோ பாவலனைக் கேட்டான்! "முன்னோர்
கல்மீது உளியோட வைத்த போது
'கல்கல்கல்' எனும்ஓசை எழுப்பக் கேட்டு
கல்லென்று பெயர்வைத்தார்" என்றான்! பேகன்
கண்கலங்க "பாமன்னா! உனையி கழ்ந்து
சொல்லியஎன் வார்த்தைகளைப் பொறுப்பாய்" என்று
தோள்தழுவி பொன்னளந்து அனுப்பி வைத்தான்!



# ஒன்றும் செய்யாததேன்!

—அமரர் அண்ணா

காமராசர், இன்னமும் தன்னை ஒரு ஏழை பங்காளராகவே காட்டிக்கொள்ள முனைகிறார். ஏழை எளியவர்களைப் பற்றியும், தமிழர், தமிழர்களைப்பற்றியும் பேசினால்தான் வாழ்வு கிடைக்கும் என்று பேசுகிறார். இன்றும் பேசுகிறார்! அன்று கூட பேசினார்!! இடையே முதலமைச்சராக இருந்தபோது மட்டும், வாய் மூடிப்போய்விட்டது!!!

காமராசரது வேடத்தைக் கலைத்துப் பார்க்க இப்போது இந்தக் கட்டுரை பயன்படக்கூடும். 3—2—57ல் வெளியானதென்றாலும், காமராசருக்காகவே மீண்டும் படைக்கிறோம்.!

---

தமிழ்நாடு மிகவும் வறுமை மிக்கவர்கள் உள்ள நாடு.

இம்மாநிலத்திலிருந்து வெளிநாடுகளுக்குப் போனவர்கள் கூலி வேலைக்குத்தான் போயிருக்கிறார்கள்.

இதர மாநிலங்களிலிருந்து போனவர்கள் உத்யோகம் வர்த்தகம் ஆகியவைகளுக்காகப் போயிருக்கிறார்கள்.

இது நெடுநாட்களாக இருந்து வரும் நிலை; இதைப் போக்குவதற்கு நாம் வழி காணவேண்டும்.

இங்கிருந்து சென்றவர்களின் கஷ்டம் துன்பம் என்னவென்பதை உணர்ந்து அவற்றைப் போக்க அனுகூலம் காட்டி நாம் நடக்க வேண்டும்,

• • •

எவ்வளவு உருக்கம்! எவ்வளவு வேதனை! எத்துணை அனுதாபம்! — மிகவும் வறுமையுள்ளவர்கள் உள்ள நாடு என்கிறார் தமிழ்நாட்டை. அதனால் இலங்கைக்கு ஓடியும், மலேயாவுக்குச் சென்றும், பர்மாவுக்குப் போயும், பற்பல வெளியிடங்களுக்குக் கூலி வேலைகளுக்குச் செல்வதையும் எடுத்துரைக்கிறார். அது மட்டுமல்ல அன்பர்காள்! நமது தமிழர்கள் இப்படி அவதியடைகின்றனர். அதே சமயத்தில் இதரமாநிலங்களிலிருந்து போனவர்கள் உத்தியோகத்துக்கும் வர்த்தகத்துக்கும் போகிறார்களாம்! இது இன்று நேற்று உள்ள நிலையல்ல. நெடு நாட்களாகவே இருந்து வருகிறதே எனவும் எடுத்துரைக்கிறார். இப்படி எடுத்துரைப்பதோடு மட்டும் போய்விடாது, "இதனைப் போக்குவதற்கு நாம் வழிவகை காண வேண்டும்" என்றும் வலியுறுத்துகிறார்! என்னே இவர்தம் ஆர்வம்! தமிழரின் துயர் துடைப்பதில், காட்டிடும் உணர்ச்சி எத்தனை! வேதனையும் கண்ணீரும் கலக்க விளக்குகிறார் தமிழரின் நிலையை! இதனைப் போக்க வழி கண்டிட வேண்டும்—எனவும் அழைக்கிறார். என்னே இவரது தமிழ் நாட்டுப் பற்று—யாரிவர்—என்று கேட்பீர்கள்.

இவ்வண்ணம் எடுத்துரைத்தவர் வேறு யாருமல்ல இன்று அரியாசனத்திலமர்ந்தபடி விறைத்தும் முறைத்தும் பார்க்கிறாரே நமது முதலமைச்சர் காமராஜர் அவர்தான் இவ்வண்ணம் பேசியது! அப்போது, அவர் முதலமைச்சராகவில்லை—1954 ஜனவரித் திங்கள். சென்னைக்கு அடுத்த திருவான்மியூரில் கூடிய கிராம ஊழியர்கள் மாநாட்டில் பேசியபோதுதான் அவ்வண்ணம் வெளியிட்டார்!

அவரது பேச்சினை இப்போது ஒருமுறை படித்துப் பாருங்கள்—அதில் எத்தனை விவேகமும் வேதனையும் வழிந்தோடுகிறது—தமிழர்கள் படும் துயரம் பற்றி எவ்வளவு துடிப்பு தொனிக்கிறது—இப்படிப் பேசிய முதலமைச்சர், அரியணை ஏறியதும், என்ன செய்தார்?

இலங்கையிலிருந்து எண்ணற்றவர்கள் நாதியற்றவர்களாக்கப்பட்டு, இருக்கவும் இடமின்றி விரட்டியடிக்கப்படுகின்றனர்!

சட்டசபையில் தீர்மானம் கொண்டுவந்தனர்—டில்லிக்கும் அனுப்பினர்—என்ன ஆயிற்று, அதன் கதி? கேட்டாரா முதலமைச்சர்!

இலங்கைவாழ் தமிழர்களின் மொழிக்கும் அனுமதியில்லை யென்று பண்டாரநாயகாவின் சர்க்கார் படுமோசமான நடவடிக்கையை மேற்கொண்டது.

அமைச்சராகுமுன் கண்ணீர் வடித்தாரே காமராஜர், என்ன செய்தார் இக்குறை போக்க? எண்ணற்ற இலங்கைவாழ் தமிழர்கள் அடக்குமுறைக்கு ஆளாயினர். சாக்காட்டின் மடியிலும் சரணடைந்தனர். கேட்டாரா காமராசர்? கேட்கும்படிச் செய்தாரா, நேருபிரானை?

அதுபோதாது என்று இதோ கடந்த சில நாட்களாக இலங்கையிலே அறப்போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஓடும் காரின் நம்பர் பலகையிலே சிங்களத்தைத் தவிர்த்து எம்மொழியும் இருக்கலாகாதென்று ஒரு புது உத்தரவு போடப்பட்டது. இதை எதிர்த்து இலங்கைவாழ் தமிழர்கள், குமுறும் கடலாகியுள்ளார்கள்.

இந்த நிலைமையினை இதோ மதுரை, 'தமிழ்நாடு' விளக்கமாகத் தீட்டிக் காட்டுகிறது.

"மக்களுக்கு விளங்கும் மொழியில் ஆட்சி நடைமுறை இருத்தல்வேண்டும் என்ற நேர்மையான கொள்கையை வற்புறுத்துவதற்காக தமிழர்களின் தொன்மைப் புகழ் வாய்ந்த யாழ்ப்பாணத்தில், இலங்கையின் இணைப்பரசியல் கொள்கைக் கட்சியினர், புதிய முறை

யில் ஓர் அறப்போரைத் தொடங்கியுள்ளனர். மோட்டார் ஊர்திகளின் எண் தகடுகள் சிங்களமொழியில் இப்போது அமைக்கப்படுவதைக் குறித்துத் தம்முடைய எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக, யாழ்ப்பாணச் சிறைகளின் மேற்பார்வையாளருடைய மோட்டார் ஊர்தி, செல்லாவண்ணம் தமிழ்த் தொண்டர்கள் தடுத்தனர் என்று தெரிகிறது. மூன்று நாட்களுக்குமுன் (8-1-57) ஏறத்தாழ நூறு தொண்டர்கள் பொதுச்சாலையில் படுத்துக் கொண்டார்கள் என்றும், யாழ்ப்பாண நகரில் சிங்கள எண் தகட்டைக்கொண்ட ஒரே ஒரு மோட்டார் ஊர்திக்கு எதிராக நடைபெற்ற இச் செயல், அதிகாரிகளுடைய கவனத்தைக் கவர்ந்துள்ளதென்றும் ஒரு செய்தி கூறுகிறது. சிறைகளின் மேற்பார்வையாளரைச் சந்தித்துப் பேசிய அறப்போர்த் தொண்டர்கள், தம்முடைய நோக்கம், அமைதியைப் பாதுகாப்பதேயல்லாது, குலைப்பதல்லவென்றும் விளக்கிக் கூறியிருக்கிறார்கள். சிங்கள எண் தகடுள்ள மோட்டார் ஊர்திகள் பொதுச் சாலைகளில் சென்றால், உணர்ச்சி வயப்பட்ட சூழ்நிலையில் சமூகக் கலகங்கள் ஏற்படக் கூடுமென்றும், அவற்றைத் தடுப்பதே தம்முடைய அறப்போரின் நோக்கமென்றும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். பொதுவாக, அறப்போர்கள் மூலம் குறிக்கோள்களை அடையும் முறை ஆதரிக்கத் தக்கதல்ல என்றாலும், யாழ்ப்பாண மக்களின் நோக்கம் அமைதியைப் பாதுகாப்பதாக இருப்பது குறிப்பிடத் தக்கது. இலங்கையில் ஒரு மொழி ஆதிக்க வல்லாட்சி முறை தோன்றிய பிறகு, சிங்கள சமூகத்தினருக்கும், தமிழ் மக்களுக்குமிடையே பிளவு ஏற்பட்டிருப்பது பெரிதும் வருந்தத்தக்கதாகும். பெரும்பான்மையான சமூகத்தினர் சிறுபான்மையினருடைய உரிமை, நலம், கருத்து முதலிய வற்றிற்கு மதிப்புக் கொடுப்பதே மக்களாட்சியின் அடிப்படை. இலங்கையின் மக்கள் தொகையில் தமிழர்கள் ஏறத்தாழ நான்கில் ஒரு பகுதியினராவர். அண்மையில் வெளியான தலைமைப் பதிவாளரின் அறிக்கையின்படி, தமிழர்களின் எண்ணிக்கை 22-இலட்சத்திற்கு மேற்பட்டதாகும். இவ்வளவு எண்ணிக்கையுள்ள ஒரு சமுதாயத்தின் விருப்பத்திற்கு மாறாக, அரசினர் நடந்துகொள்வது ஒழுங்கல்ல. மொழி ஆதிக்க வல்லாட்சியினால் ஏற்படும் விருப்பு—வெறுப்புகளின் கடும் விளைவுகளுக்கு வரலாறு பல சான்றுகள் காட்டுகின்றது. அவையனைத்தும், கட்டாய முறையில் ஒற்றுமை உண்டாக்கும் முயற்சிகளெல்லாம் உடனடியான வேற்றுமையையும் நீண்ட காலப் பிளவுகளையும் தோற்றுவித்துள்ள உண்மையைத்தான் வற்புறுத்துகின்றன. இலங்கை ஒரு சிறு நாடு; அங்குச் சிங்களர்கள், தமிழர்கள் ஆகிய இருபெரும் சமூகத்தினரே பெரும் பான்மையினராக முன்னணியில் இருக்கிறார்கள். இவ்விரு சமூகங்களின் மொழிகளும் ஆட்சி மொழிகளாவதற்கு மாறாக, சிங்கள மொழியை மட்டும் அரசியல் ஆதிக்க மொழியாக்கியது ஒரு பெருந்தவறாகும்.''

இந்தத் தவறினைக்களைந்தெறிய காமராசர் என்ன செய்தார்? வழிவகை காணவேண்டும் என்றாரே அமைச்சராகு முன்பு! அதனைக்காண, இதைவிட வேறு அரியதோர் சந்தர்ப்பம் அவருக்குக் கிடைக்கவா போகிறது? இருஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதே அவர் முதலமைச்சராக வந்து! என்ன செய்தார்? கண்ணீர் உகுப்பது போலப் பேசினார்! நாம் என்னென்ன சொல்லுகிறோமோ, அதனை ஒளிக்கவில்லை—மறைக்கவில்லை—

வேறு மாநிலத்தான் வியாபாரத்துக்கும்,

உத்தியோகத்துக்கும் மட்டுந்தான் வெளிநாடு போகிறான்.

தமிழனோ, கூலியாகப் போகிறான்.

என்று தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொன்னார். ஆனால் அப்படி அவதியுறும் தமிழனின் துயரக் கண்ணீரைத் துடைக்க என்ன செய்தார், காமராசர்?

அழுகுரல், அனுதினமும் கேட்கிறது.

இருக்கவும் இடமில்லாது ஓடி வருகின்றனர், தமிழர்கள்!

அவர்தம் மொழியும் வெட்டிப் புதைக்கப் படுகிறது.

இதற்கெல்லாம் வகை காணவேண்டும் என்றாரே 'பச்சைத் தமிழர்' என்ன செய்தார்? ஏன் எதுவும் செய்யவில்லை?

வெளிநாடுகளில் தமிழர் அடையும் துயரம்பற்றி அறியாமலிருந்தாலும், சரிஎனலாம், அறிந்தவர், தெரிந்தவர், அதுபற்றி வருந்தியவர், அரசபூபதியானதும் வாளா இருந்திடக் காரணம் என்ன? வாடுகின்றனரே, நமது சகோதரர்கள்! அதனைப் புரிந்தும், வாய் மௌனியாகக் காரணமென்ன!!

டில்லி அதட்டும் என்கிற பயமா? அல்லது, பதவித் திரை கண்ணையும் கருத்தையும் மறைத்துவிட்டதா!

தக்க பதில் தரமாட்டார், அவர். எதற்குத்தான் தந்திருக்கிறார், இதற்குத் தர!!

இப்படிப் பட்டவர்களை எண்ணித்தான், பாரதியார் பாடினார்போலும்,

''நெஞ்சில் உரமுமின்றி
 நேர்மைத் திறனுமின்றி
வஞ்சனை செய்வாரடீ கிளியே!
 வாய்ச் சொல்லில் வீரரடி.''

என்று. நெஞ்சில் உரமும், நேர்மைத் திறனுமற்ற காமராசர்களை நம்பி நம்பி எத்தனைத் தடவைதான் தமிழகம் தவிப்பது—தன் புதல்வர்கள் படும்பாடு கேட்டு, கண்ணீர் வடிப்பது. இதற்கொரு முடிவேற்படாதா! ஏக்கமும் துக்கமும்தான் நமது நிலையா?

---

# நான் ஒரு நாத்திகன்!

''மற்றைய உயிர்கட் கெல்லாம்
 மனிதனே உயர்ந்தோன் என்றும்
உற்றவோர் இறைவ னன்றி
 ஒருவர்க்கும் அடிமை யில்லை
பற்றிடும சமய மெல்லாம்
 பகுத்திதைச் சொன்னால் நானும்
முற்றிலும் சமய வாதி
 முழுமனங் கொண்டு சொல்வேன்

ஒன்றிய மனித ருக்குள்
 உயர்வுடன் தாழ்வும் இன்னும்
குன்றென வேறு பாடும்
 உண்டெனச் சமயம் சொன்னால்
கன்றிய சாதி பேதம்
 கருதுதல் கொள்கை என்றால்
இன்றல என்றும் நானோர்
 நாத்திகன்'' என்றார் அண்ணா,

—புலவர் இளங்கோவன்

# சோஷலிஸ நாடகத்துக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்!

## வாக்காளர் கவனத்துக்கு மட்டும்!

காங்கிரசுக் கட்சியைப் பற்றியும், அதன் மத்திய அரசைப் பற்றியும், இதை விட சிறப்பான விமர்சனத்தை இன்னொருவர் தரவேண்டியதில்லை. இந்தக் கட்சியின் அரசியல்தான் 1972-ல் தமிழகத்தைக் காப்பாற்றப்போகிறதாம்! 19—10—69-ம் நாளைய 'நவசக்தி' தலையங்கம் இது! சண்டை பிறந்தால்தானே உண்மை பிறக்கும்? இந்த சண்டை வளரட்டும்! வாழட்டும்!!

சமீபகாலமாகப் பிரதமர் இந்திரா உட்கட்சிப் போராட்டங்களில் ஈடுபட்டிருப்பதன் விளைவாக மத்திய அரசு நிர்வாகம் குறிக்கோள் எதுவுமின்றி எப்படியெப்படி யெல்லாமோ போய்க் கொண்டிருக்கிறது. தான் தோன்றித் தன நடவடிக்கைகள்தான் நாளும் பெருகிவருகின்றனவே தவிர உருப்படியான காரியங்கள் எதுவும் மத்திய அரசில் நடைபெறுவதாகக் காணோம். பாங்கு தேசியமய மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதையொட்டி நிதி அமைச்சகம் (Finance Ministry) சிறுசிறு மாற்றங்கள் செய்யப்பட்டனவே தவிர மத்திய அரசின் கடனுதவிக் கொள்கை (Credit Policy) யில் என்ன மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்பது இன்று வரையில் தெளிவுபடுத்தப்படவில்லை. பொருளாதார நடவடிக்கைகள் அரசியல் சுயலாபம் கருதி எடுக்கப்படுவதுபோல் தோன்றுகிறதே தவிர மக்களின் நீண்டகால நலன் கருதியோ பொருளாதார உத்வேகம் ஏற்படுத்தவோ எடுக்கப்படுவதாகத் தோன்றவில்லை.

இதுமட்டுமல்ல; பத்து ஆண்டுகளாக வருமான வரிக் கணக்குக் காட்டாத ஒருவரை தனது அமைச்சரவையில் தொடர்ந்து ஒரு பிரதமர் வைத்துக்கொண்டிருப்பதும், அவர் அப்படிக் காட்டாமல் இருந்ததற்கு ஞாபக மறதிதான் காரணம் என்று பிரதமரே விளக்கம் சொல்லுவதும் நமது அரசியல்வாழ்க்கை ஒழுக்கம் எந்த அளவுக்குச் சீரழிந்து போயிருக்கிறது என்பதன் வெளிப்படையான அடையாளங்களாகும்.

நமது வெளிவிவகாரக் கொள்கையிலும் இந்த சீரழிவு பிரதிபலிப்பதால் சர்வதேச அரங்கில் நாம் ஒரு மானமிழந்த தேசமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறோம். ரபாட் மாநாட்டுக்கு இந்தியத் தூதுக்குழுவின் தலைவராகப்போன திரு. பக்ருதீன் அலி அகமத் அவமானப்பட்டுத் திரும்பியவுடன் நமது வெளிநாட்டுக் கொள்கையினையே மறுபரிசீலனைசெய்ய வேண்டுமென்று நிருபர்களிடையே பகிரங்கமாகக் கருத்துத் தெரிவிக்கவில்லை என்று அப்பட்டமாக மறுத்துப் பேசுகிறார். அவர் அப்படிப் பேசவில்லை என்று அரசாங்க அதிகாரி ஒருவர் நிருபர்களிடையே சொன்னபோது, "அவர் அப்படித்தான் பேசினார் எங்களிடம் தான் பேசினார்" என்று நிருபர்கள் திருப்பிப் பதிலளித்திருக்கிறார்கள்.

மத்திய அமைச்சரவையில் நமது தலைவிதியை நிர்ணயிக்கும் மூத்த அமைச்சர்கள் என்ன யோக்கியதையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இவை சில உதாரணங்கள்.

திரு. தினேஷ்சிங் நமது வெளிவிவகாரத்தைக் கையாண்ட அனுபவமற்ற போக்கினால், நேப்பாளத்திடம் அவமானப்பட்டோம். ஹானோயில் நமக்கு சரியான வரவேற்பில்லை. ரபாட் மாநாட்டுக்கதவு நமக்கு மூடப்பட்டது. பாகிஸ்தான் போக்கில் மாற்றமிருப்பதாக நமது வெளிவிவகார அமைச்சர் தான் பாகிஸ்தான் அமைச்சரோடு நடத்திய பேச்சிலிருந்து தெரிந்துகொண்டதாகச் சொல்ல, பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் அதை மறுக்க நாம் மூக்கறுபட்டோம். நேருஜி பதினெட்டு ஆண்டுகள் கஷ்டப்பட்டு கட்டிய நமது சர்வதேச அந்தஸ்தை திரு. தினேஷ்சிங்கின் அவசரக்கோல நடவடிக்கைகள் ஆறேழு மாதங்களில் நாசப்படுத்திவிட்டது.

வருமானவரி கட்டாத திரு. ஜகஜீவன்ராம், நிருபர்களிடம் நேற்றுபேசியதை இன்று இல்லை என்று மறுக்கும் திரு. பக்ருதீன் அலிஅகமத், சர்வதேச அரங்கில் பழம்பெரும் பாரததேசத்தை அவமானச் சின்னமாக்கிய திரு. தினேஷ்சிங் இவர்கள்தான் என்றால், இந்த தேசத்தின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்று எண்ணிப்பார்க்கவே பயமாக இருக்கிறது.

காங்கிரஸ் அக்ராசனர் எழுதாத கடிதத்துக்கு அவசர அவசரமாகப் பதில் அனுப்பித் தங்கள் பதவியைக் காப்பாற்றிக் கொள்ளுவதில் சூட்டிப்புக் காட்டும் பிரதமரும் அவருடைய சகாக்களும் தேசத்தின் பொருளாதாரக் கொள்கைகள், வெளிநாட்டு உறவு பற்றி அக்கறையும் சூட்டிப்பும் காட்ட முடியாமல் போனதன் மர்மம் என்ன?

தனது ஆதரவாளர்கள் தேசத்தை நாசப்படுத்தும் எதையும் செய்யலாம், தனது கோஷ்டியின் பக்கம் நிற்காதவர்கள் சோஷலிஸவாதிகளாக இருந்தாலும் பலி வாங்கப்படவேண்டியவர்கள் என்கிற பிரதமரின் நிலைக்கு இந்திய மக்கள் நிச்சயம் ஆதரவு காட்டமாட்டார்கள்.

வெறும் பதவிச் சண்டையும் கோஷ்டிச் சண்டையும் சோஷலிஸத்துக்கான போராட்டம் என்கிற அந்தஸ்தைப் பெற்றுவிட முடியாது. பிரதமர் தனது சோஷலிஸ நாடகத்துக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைத்து, உண்மையான முற்போக்குப் பொருளாதார நடவடிக்கைகளில் தீவிர கவனம் செலுத்த முன்வர வேண்டும்.

# உணவுப் போராட்டமா இது?

அன்புள்ள நண்பா!

இத் திங்கள் 27-ம் நாள், முதல் கட்டமாக ஒரு போராட்டத்தை நடத்தவிருப்பதாக வலது கம்யூனிஸ்டு கட்சி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. இப் போராட்டம் ஏன், எதற்கு என்று காரணங்களை விளக்கி கட்சித் தலைவர் எம். கல்யாணசுந்தரம், "ஜனசக்தி" இதழில் ஒரு கட்டுரையும் எழுதி இருக்கிறார்.

போராட்டத்தின் கரு, மக்களுக்குத் தட்டுப்பாடும் கட்டுப்பாடுமின்றி அரிசியும் மற்ற மற்ற உணவுப் பண்டங்களும் கிடைக்கவேண்டும் என்பதாம்!

உணவுப் பண்டங்கள் மக்களுக்குத் தாராளமாகக் கிடைக்கச் செய்யவேண்டும் என்பதை அரசின் கவனத்துக்குக் கொண்டுவருவதற்குத்தான் இந்தப் போராட்டத்தை முதல் கட்டமாக நடத்துவதாகக் கூறுகிறது வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சி.

போதுமான அளவுக்கும், தட்டுப்பாடற்ற முறையிலும் மக்களுக்கு உணவுப் பொருள்கள் கிடைக்க வேண்டும் என்பதிலே எவரும் கருத்து வேறுபாடு கொண்டிருக்கக்கூடும் என்று யாராலும் நம்பமுடியாது.

மக்களுக்கு உணவுப் பொருள் தட்டுப்பாடு என்றிருந்த ஒரு நிலையில், திராவிட முன்னேற்றக் கழகம்கூட, இதனை ஒரு பிரச்னையாக்கி, அரசின் கவனத்துக்குப் போராட்டக் குரலின்மூலம் கொண்டு வந்திருக்கிறது, இதற்கு முன்னால். விலைவாசிகள் வான் உச்சிக்கு உயர்ந்து கொண்டுபோன ஒரு சந்தர்ப்பத்தில், "விலைவாசி உயர்வுப் போராட்டம்" என்ற பெயரிலேயே ஒரு போராட்டத்தையும் கழகம் நடத்தி இருக்கிறது.

வலது கம்யூனிஸ்டு கட்சியின் இப்போதைய போராட்டம்கூட, இதைப்போன்றதுதான் என்று கூறி விடத் தோன்றும். ஆனால் தோழர் கல்யாணசுந்தரம் அவர்களின் கட்டுரையை, ஆழ்ந்து, அகழ்ந்து படிக்கும் போது சில உண்மைகளையும் புரிந்துகொள்ள முடிகிறது.

உணவுப் பிரச்னையின் காரணமாகவே 1967-ல் காங்கிரசுக் கட்சி, தன் ஆளும் உரிமையை இழந்தது;

உணவுப் பிரச்னை மிகுந்துவிட்டிருக்கிற ஒரு நாட்டு மக்களை கடவுள் சந்திப்பதானால்கூட, 'வெண்ணெய், ரொட்டி'’யின் வடிவத்தில்தான் சந்திக்கவேண்டும்;

காங்கிரசுக் கட்சியைப் போலவே, பல நாடுகளிலும் உணவுப் பிரச்னை காரணமாகவே ஆட்சி கவிழ்க்கப்பட்டு விட்டிருக்கிறது – என்பதனையெல்லாம் அக்கட்டுரை வெளிப்படையாகவே சித்திரித்து எடுத்துக் காட்டியிருக்கிறது.

**கட்டுரையிலிருந்து, நாமாகச் சிந்தித்துத் தெரிந்துகொள்ளவேண்டுவது, இதே உணவுப் பிரச்னையை வைத்து தி. மு. க. ஆட்சிக்குச் சரிவை உண்டாக்கக் கம்யூனிஸ்டுக் கட்சி முடிவுக்கு வந்துவிட்டது என்பதாகும்.**

காங்கிரசை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகம் போர்க்கோலம் பூண்ட நேரங்களிலெல்லாம், காங்கிரசுக் கட்சியுடன், கழகம் தோழமையுணர்வு கொண்டிருந்ததுமில்லை. அந்த உணர்வுடன் செயல்பட்டிருந்ததுமில்லை.

காங்கிரசுக் கட்சியின் எதேச்சாதிகாரமான போக்குகளின் காரணமாகவும், ஆளும் எந்திரத்தை, அது பயங்கரமான முறையில் சுழற்றிக்கொண்டிருந்தது தவிர்க்கப்படவேண்டும் என்பதற்காகவும், காங்கிரசுக் கட்சி எதிர்க்கப்பட்டதுடன் முழுவதுமாக அதனைப் புறக்கணிக்கத்தக்க வழிமுறைகளை, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆய்ந்து, காங்கிரசுக்கு எதிரான உணர்வுகளை ஒருமுகப்படுத்தி, தோழமைப்படுத்தி, காங்கிரசை வீழ்த்தினார்கள்.

காங்கிரசுக் கட்சியை வீழ்த்திய பெருமையில் வலது கம்யூனிஸ்டுகளுக்கும், இடது கம்யூனிஸ்டுகளுக்கும் கூட கொஞ்சம் பங்குண்டு என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

இதைப்போல், வலதானாலும் இடதானாலும் தனித்தனியாகவோ, இணைந்தோ ஒரு போராட்டத்தின் மூலம் கழகத்தைச் சரித்துவிட முடியும்; சரித்துவிட வேண்டும் என்று செயல்படும் போக்கினை நினைந்து சிரிப்பதா, அழுவதா என்றே விளங்கவில்லை.


திராவிட முன்னேற்றக் கழகத்துக்குக் காங்கிரஸ் என்பது எப்படி ஒரு எதிர்க்கட்சியோ, அப்படித்தான் எந்த கம்யூனிஸ்டுக் கட்சியானாலும் எதிர்க்கட்சிதான், அதைப்போலவே, சுதந்திராவானாலும், லீகானாலும் எதிர்க்கட்சிதான்! இவை ஒவ்வொன்றிற்கும் தனித்தனிக் கொள்கைகளும், கொடிகளுமிருக்கின்ற வரையில் ஒரு கட்சிக்கு இன்னொரு கட்சி எதிர்க்கட்சிதான்.

ஆனால், பல்வேறுபட்ட கொள்கை, கோட்பாடு

# சொல்லாற்றல்

சொட்டுகிற தேனென்போம் கன்னல் என்போம்
சுவைக்கின்ற மதுவென்போம் கனிதான் என்போம்
காட்டுகிற க''றென்போம் பாசம் என்போம்
கலையென்போம் உரையென்போம் கவிதை என்போம்
கொட்டுகிற மழையென்போம் அருவி என்போம்;
கூடும்நதிக் கடலென்போம் ஓடை என்போம்;
வெட்டுகிற மின்னென்போம் விண்ணை ஆளும்
வித்தகனும் அண்ணாவின் சொற்கள் என்போம்!

பண்ணென்போம் பாட்டென்போம் வண்ணம் என்போம்
பணியென்போம் அணியென்போம் பரதம் என்போம்
தண்ணென்போம் நெருப்பென்போம் தருவே என்போம்
தளிர்என்போம் மலரென்போம் நிழலே என்போம்



# என்னவென்போம்!

கண்ணென்போம் கருத்தென்போம் காட்சி என்போம்
கணக்கிலவாம் சொல்லுதிர்க்கும் கா...
விண்ணென்போம் அவன்இருக்கும் இட...
வித்தகனும் அண்ணாவின் சொற்கள் என்போம்!

மடைஉடைக்கும் புனலென்போம்; மா...
மறித்தெரிக்கும் கனலென்போம் ...
தடைஅறுத்த வாளென்போம்; தமிழச் சாதி
தலைகாத்த வேலென்போம்; தருக்குற் றோரின்
படைதவிர்த்த சிலைஎன்போம்; பண்பில் நின்ற
பகுத்தறிவு மலைஎன்போம்; பாருக் கெல்லாம்
விடைகொடுத்த அறிவென்போம்; அண்ணா என்போம்
வித்தகனின் சொற்களை நாம்என்ன வென்போம்!

—கார்வண்ணன்

கள் என்றாலும், அவை அனைத்தும் "மக்கள் நலன் கருதுகிறோம்!" என்று கூறுகிற அளவுக்கு (கூறுகிற அளக்குத்தான்!!) ஒருசில கருத்துக்களிலேனும் ஒன்று பட்டிருக்கக் கூடும்! இந்த ஒன்றுபட்ட தன்மைகளைத் திரட்டித்தான் "தோழமையுணர்வு" ஊட்டி வைத்தார் அமரர் அண்ணா.

இந்த வகை உணர்வு, காங்கிரசுக் கட்சியின் வரலாற்றில், அங்குமிங்குமாக அதுவும் காங்கிரசுக் கட்சியின் லாபத்துக்காக மட்டிலும் செயல்பட்டிருக்கக் கூடும். ஒத்துழைப்புத் தந்தவை, பலியாகி, அல்லது பல்லிளித்துக்கொண்டு மிருந்திருக்கின்றன!

அரசியல் பின்னணி. இந்தச் சூழலில் இருக்கும் போதுதான், உணவுப் பிரச்னைக்காக ஒரு போராட்டம் என்று வலது கம்யூனிஸ்டு இப்போது அறிவிப்புக் கொடுத்திருக்கிறது.

"தோழமைக்கட்சி" என்று கழகமே கம்யூனிஸ்டு கட்சியை அழைத்துக்கொண்டிருப்பதாக - அந்தக் கட்டுரையே ஒப்புக்கொண்டிருக்கிறது.

"தோழமைக் கட்சி" என்ற உணர்வு காரணமாகவே, அரசியலில் பேரறிஞர் அண்ணா அவர்கள் சில பல முன்னுதாரணங்களையும் படைத்துக் காட்டி இருக்கிறார். அரசு, தானாக எடுத்துக்கொள்ள வேண்டிய சில பல நடவடிக்கைகளில், மாற்றுக் கட்சியின் கருத்தையும் கேட்டு, ஏற்ப, இயைய நடந்து காட்டியிருக்கும் விந்தை, ஜனநாயகத்துக்குக் கூட புதுமையானதாகும். கம்யூனிஸ்டுகள்கூட பல சந்தர்ப்பங்களில் ஆலோசனை கேட்கப் பெற்றிருக்கிறார்கள்.

இவையெல்லாம், "தோழமை உணர்வு" காரணமாகப் பிறந்தனவாகும்.

காங்கிரசுக் கட்சி நாடாண்ட காலத்தில், அந்த அரசின் உணவுக் கொள்கையும், எதிரொலிகளுமே நாட்டில் உணவுப் பொருள் தட்டுப்பாட்டை உண்டாக்கி வைத்தன என்பது கம்யூனிஸ்டுகளுக்குப் புரியாதது என்று நம்ப முடியாது.

உலக நாடுகளின் வரலாற்றில் எங்கெங்கே, எந்தெந்த சந்தர்ப்பங்களில் புரட்சிகள் வெடித்தன என்பதற்கான ஆராய்ச்சியை அன்றாடம் நடாத்திக்கொண்டு வருபவர்கள் அவர்கள்.

எனவே, காங்கிரசுக் கட்சியின் உணவுக் கொள்கையின் எதிரொலிகளை அறியமாட்டாதவர்கள் அல்லர்.

கழகம், ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்ட இந்த இரண்டரை யாண்டுக் காலத்திலே, தமிழகத்திலே விவசாய உற்பத்திக்காகக் கழகம் மேற்கொண்டுள்ள முயற்சியினையும் அறியாம லிருக்கிறார்கள் என்று யாரால் நம்ப முடியும்?

"வரட்சி நிலை ஏற்பட்டுவிட்டது! வடபுலமே! நிதி உதவி செய்!" என்று குரல் கொடுத்தபோது, கம்யூனிஸ்டுகளின் குரலும் சேர்ந்து ஒலிக்கவில்லையா? நிலை அறியாத காரணத்தாலா, குரல் இணைந்து ஒலித்தது? நம்ப முடியுமா அப்படி?

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், இடதோ, வலதோ, கம்யூனிஸ்டுகள் உற்பத்திக்குக் குந்தகம் விளைவித்துக்கொண்டு வருவது என்பது தொடர்கதையாகவே ஆகிக்கொண்டிருக்கிறது—கூலி உயர்வு என்பதன் பேரால்!

முற்போக்கு முறைச் சாகுபடி என்று, டிராக்டர் போன்ற எந்திரக் கருவிகளைப் பயன்படுத்த வரும்

போது "டிரக்டர் எதிர்ப்பு"ப் போராட்டங்கள் என் பதன் பேரால், குந்தகம்!

இவை அனைத்தும், உணவு உற்பத்தியைத் தடுப்பது என்றே பொருள் கொள்ளத்தக்கனவாகும்.

கூலிஉயர்வு பிரச்னை என்பது இன்று, நேற்று அல்லது கழகம் ஆட்சிப்பொறுப்புக்கு வந்த பிறகுதான் முளை விட்டது அல்ல; காங்கிரசாட்சியின் தொடக்க காலத்திலேயே முளைத்துவிட்டது என்பது அனைவரும் அறிந்ததுதான்.

தொடக்க காலக் கூலிநிலை இன்றைக்கு இல்லை; தொடக்ககால சாகுபடிமுறைமைகள் இன்றில்லாததைப் போலவே. ஆயினும் தேவைகளும், பிரச்னைகளும் பெருகிக்கொண்டே வருகிற ஒரு சூழ் நிலையில், கூலி உயர்வுக்கும் ஒரு முடிவேற்பட்டுவிட முடியாது என் பதனையும் உணரமுடியும்.

ஆனால் இதன்பேரால் உற்பத்தியே பாதிக்க வைக்கப்படுகிறது—வைக்கப்பட்டது என்றால் அதன் பொருள் என்ன?

கடவுளேகூட, "ரொட்டி, வெண்ணெய்" வடிவத் தில் வந்துதான் மக்களைச் சந்தித்துத் தீரவேண்டும் என்று எடுத்துக்காட்டுகிற ஒரு பிரச்னையில், இது போன்று தம் கொள்கைகளை வகுத்துக்கொண்டு செயல் பட்டுக்கொண்டும் வருகிற ஒரு சந்தர்ப்பத்தில்,

தட்டுப் பாடின்றி மக்களுக்கு உணவுப்
பொருள் கிடைக்கச் செய்ய ஒரு போராட்டம்
—முதல் கட்டப் போராட்டம்

—என்று அதே கம்யூனிஸ்டு கட்சியும் முன்வருகிறது! அறிவிப்புக் கொடுக்கிறது! கட்டுரை வடிவில் விளக்க மும் தரப்படுகிறது! என்றால் அழுவதா, சிரிப்பதா?

கழகத்தைப் பொறுத்த மட்டில் அழத்தேவை யில்லை. சிரிக்கத்தான்வேண்டும்! ஏனென்றால் கழக அரசு, தன் அனைத்து வேலைத்திட்டங்களிலும் முதன் மையானதாக விவசாய உற்பத்திக்கே முதலிடம் கொடுத்துச் செயல்பட்டுக்கொண்டு வருவதை கம்யூ னிஸ்டுகள் அறிந்தே வைத்திருக்கிறார்கள்!

உணவு உற்பத்தியின் வேகத்தை, விவசாயப் பெருங்குடி மக்கள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்! உழவர் பெருங்குடியினரும் உணர்ந்து வருகிறார்கள். காங்கிரசாட்சிக் காலத்தில் கிடைக்காத பல சலுகை களையும், பெற்றுத் தங்கள் சாகுபடியை செவ்வனே செய்து வருகிறார்கள்,

அந்த விவசாயப் பெருங்குடியினருக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளும், இடையூறுகளும் கம்யூனிஸ்டுகளிட மிருந்துதான் என்பதையும் அவர்கள் அறிந்து வைத் திருக்கிறார்கள்.

காங்கிரசு கவிழ்ந்ததற்கான காரணத்தைக் கூறி' ரொட்டி, வெண்ணெய் எடுத்துக் காட்டினை எடுத்துக் காட்டி, "உணவுப் போர்" என்று ஒலிக்கப்படும் குரலின் பொருள் புரிகிறது! நாடு இதனைப் புரிந்து கொள்கிறது; விளைவுகளைப் புரிந்துகொளள வேண்டியவர்கள் கம்யூ னிஸ்டுகள்தான்!

அன்புள்ள,

**திருவாரூர் முத்துராமன்**

# விழித்திடும் வையம்!

மன்னும் உலகினைத் தன்வயப் படுத்தி
மாண்புறும் உயிர்களை மயக்குறச் செய்யும்
கன்னங் கரிய இருள்திரை கிழித்துக்
கதிரவன் தனது முகத்திரை காட்ட;
முன்னம் பரவிய இருட்கூட் டமெலாம்
சிறிது சிறிதாய்த் தன்னிறம் குன்றிப்
'பின்னுன தாட்சியைப் பிடிப்பேன் நானெ'ன
சூளுரைத் தேகப் புத்திளங் காலைப்


போத ரும்பும் புனிதஅவ் வேளையிற்
சேவல் தனது சென்னியை உயர்த்தி
ஆதவன் வரவினை அறைந்து கூவி,
அவனியில் மக்கள் துயிலினைக் களையும்;
நாதங் குறைந்த நரம்பிலா வீணையாய்
நலிந்தது இருளெனும் மகிழ்ச்சியில் திளைத்த
ஏதமில் காகக் கூட்டமும் பறவை
இனங்களும் கூடிப் பண்ணிசை முழங்கும்!

கழிபே ருவகை நல்கிடும் காலைக்
காட்சியின் மாட்சியில் உள்ளந் திளைக்க
அழிவே இல்லா உழுதொழில் புரியும்
ஆன்ற மறவர் தத்தம் பணியிற்
கிழிவே நல்கும் சோம்பல் இருளைக்
கிழக்கின் வெளுப்பில் விரட்டி விட்டு
உழைப்பே நல்கும் உயர்வினை நாடித்
தம்புலம் திருத்தத் தகும்பல கருவி

தாங்கிச் செல்லும் தகைமிகு காட்சி
பகைவரை வெல்ல பாரத வீரர்
வீங்கு தோள்களில் ஏந்திச் செல்லும்
வியன்மிகு போர்ப்படை என்னத் தோன்றும்;
ஆங்கதில் உண்மையும் அமைந்திடக் காண்போம்
அவனியில் தமது அயரா வுழைப்பால்
தீங்குசெய் வறுமைப் பகையது நலியத்
திரளும் மறவர்தம் படையிது வன்றோ?

ஞாயிறின் பொலிவில் ஞாலம் முழுதும்
மூழ்கிடும்; மங்கையர் தம்மில் தோறும்
வாயில் மெழுகி வனைந்திடுங் கோலம்
செங்கதி ரொளியில் தங்கொளி பெற்றுப்
பொலிவுறும்; காலைப் பணிசெய மாந்தர்
விரைகுவர்; 'ஆதவன் விழிப்பினில் வையம்
விழித்தது', என்றே சிரித்திடும மலர்கள்;
விதம்வித மாய்த்தம மெழில்நிறங் காட்டி!

—மு. வாணி



★ காதலியை விட்டுக் களம் புகுந்தான் காளை!

★ காளை, மீளுதற்குள் காட்டிவிட்டாள் கைவரிசையை, ஒரு ஆரியப் பெண்

★ ஆரியப் பெண், அரசியலில் ஆடினாள்! ஆரியரோ, மக்களிடை ஆடினார்!

★ விளைவு—தமிழகத்தின் தெளிவு!

★ அதை விளக்குவது

# "கலிங்க ராணி"

## அமரர் அண்ணா

அவர்கள் தீட்டிய அருங்காவியம்!

## 2-11-69 முதல் "காஞ்சி"யில் படியுங்கள்!

ஆசிரியர், வெளியிடுபவர், சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.